பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 16 சனிக்கிழமை 02.11.2019 கதிர் 362

## இனி அது ரகசியம் அல்ல!

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்குப் பகிரங்க ஆதரவு அளித்து களத்தில் இறங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பக்கம் 02 »

# சந்திரிகா சஜித்துடன் சங்கமம்!

## தெற்கு அரசியலில் மீண்டும் பரபரப்பு



கொழும்பு, நவ. 02

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுக் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டது. இதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்புடன் இணைந்து சஜித்துக்கு ஆதரவாக தீவிர பரப்புரைகளில் சந்திரிகா அம்மையார் ஈடுபடவுள்ளார். பக்கம் 03 »

# 5 தமிழ் கட்சிகளின் 13 அம்சங்களில் 8 ஐ அடியோடு நிராகரித்தார் சஜித்!


## கோட்டாவே செயற்றிறன் மிக்கவர் என்கிறார் சி.தவராசா



யாழ்ப்பாணம், நவ. 02

ஐந்து தமிழ் கட்சிகள் முன்வைத்த 13 அம்சக் கோரிக்கைகளில், 8 முக்கிய கோரிக்கைகள் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளன. கல்முனையைத் தரமுயர்த்துவது போன்ற சின்ன விடயங்களிலேயே வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாதவர்கள், தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டவற்றைச் செய்வார்கள் என்பற்கு என்ன உத்தரவாம் உள்ளது என்று கேள்வியெழுப்பியுள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா. பக்கம் 03 »

## விக்கியின் விளக்கம் இது!



யாழ்ப்பாணம், நவ. 02

ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு தெரிவித்த வேட்பாளர் வெற்றி பெறாமல் போனால் எமக்குச் சிரமமாக இருக்கும் என்பதனாலேயே மக்களைச் சிந்தித்து வாக்களிக்கக் கோரினோம் என வடக்கு மாகாணத்தின் முன்னாள் பக்கம் 03 »

## வெளிநாட்டு உடன்பாடுகளுக்கு தடை கோரி நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, நவ. 02

வெளிநாட்டு உடன்படிக்கைகைச்சாத்திடுவதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு கோரி உயர்நீதிமன்றில்அடிப்படைஉரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கையகப்படுத்தல் மற்றும் பக்கம் 03 »

## மைத்திரிக்காக தன் பதவியை துறக்கின்றார் சாந்த பண்டார!

கொழும்பு, நவ. 02

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

தேசியப் பட்டியல் நாடாளு பக்கம் 03 »

## அமெ. ராணுவத்தை இறக்கவே மிலேனியம் சவால் உடன்பாடு!

### சாடுகின்றார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, நவ. 02

ஜனநாயகத்துக்கு முக்கியத்துவமளிக்கும் நாடான அமெரிக்கா, பெரும்பாலான மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முயற்சிப்பது ஏன் என்று பக்கம் 02 »

## தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ். மாவட்டத்தில் தேர்தல் பணிகளில், 6 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார். பக்கம் 03 »

## மிலேனியம் உடன்பாடுக்கு அனுமதியளிக்கவேண்டும்!

### நாடாளுமன்றத்திடம் அமெ.தூதரகம் கோரிக்கை

கொழும்பு, நவ. 02

இலங்கையுடன் மிலேனியம்சவால்உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் அந்த உடன்படிக்கைக்கு இலங்கை நாடாளுமன்றம் அங்கீகாரம் அளிக்க வேண்டியது அவசியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. பக்கம் 03 »

## வவுனியா ஈச்சங்குளத்தில் வீடு எரிந்து நாசமாகியது!



வவுனியா, நவ. 02

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் வீடு ஒன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் பக்கம் 02 »

## கட்டுநாயக்கவில் சீன ரோபோக்கள்!



கொழும்பு, நவ. 02

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் முனையத்தில், வெடிபொருட்கள் மற்றும் போதைப்பொருள்களைக் கண்டறியக் கூடிய இரண்டு பக்கம் 03 »

## தபால் வாக்களிப்பு சுமுகம்

கொழும்பு, நவ. 2

2019 ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றும் நேற்று முன் தினமும் சுமுகமான நிலையில் இடம்பெற்றதாகவும், 80 சதவீதமான தபால் வாக்குகள் நேற்று முன் தினம் பதிவாகியுள்ளன எனவும் தேர்தல் கண்காணிப்புக்கான 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். பக்கம் 03 »

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரும் விழிப்புணர்வுப் பயணம்

யழ்ப்பாணம், நவ. 02

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச தினத்தை நினைவுகூரும் பொருட்டு வடக்கு முழுவதும் மக்களைச் சந்திக்கும் விழிப்புணர்வுப் பயணத்திற்கு யாழ்.ஊடக அமையம் அழைப்பு விடுத்துள்ளது.

நவம்பர் 2ஆம் திகதி, அனுஷ்டிக்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச தினத்தை நினைவுகூரும் பொருட்டு, யாழ்.ஊடக அமையம் மீண்டும் ஊடகப்படுகொலைகளுக்கு நீதியை வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவது ஆட்சி பீடத்திலேறும் அனைத்து தரப்புக்களதும் கடமையென யாழ்.ஊடக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் முதல் கட்டமாக இன்று சனிக்கிழமை குடாநாடு முழுவதுமாக மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டும் துண்டுபிரசுரங்களை யாழ்.ஊடக அமையம் விநியோகிக்கவுள்ளது.

படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவுதூபியிலிருந்து புறப்படும் விழிப்புணர்வு பயணம் அனைத்து பிரதேசங்கள் வரையிலும் பயணிக்கவுள்ளது.

தொடர்ச்சியாக வவுனியா,மன்னார்,முல்லைதீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஊடக அமைப்புக்களுடன் இணைந்து விழிப்புணர்வுப் பயணம் தொடரவுள்ளதாக யாழ்.ஊடக அமையம் அறிவித்துள்ளது.




# முல்லைத்தீவு மாவட்டத்தில் 97 வீதமான வாக்குப் பதிவு

முல்லைத்தீவு, நவ. 2

எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புகள் நேற்றும் முன்தினமும் இடம்பெற்றிருந்தன.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 97வீதமான வாக்குப்பதிவு இடம்பெற்றிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரும் முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த தபால் மூல வாக்களிப்புத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலுக்காக கடந்த 30 ஆம் திகதி மற்றும் இன்றைய தினம் (நவம்பர் மாதம் முதலாம் திகதி) ஆகிய இரண்டு நாளகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 171 வாக்களிப்பு நிலையங்களில் 17 ஆயிரத்து 676 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர்

அவற்றில் 514 தபால் மூல வாக்குகள் மீண்டும் தேர்தல் திணைக்களத்தில் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அதன் அடிப்படையில் 97 வீதமான வாக்குப்பதிவு இடம்பெற்றிருக்கின்றது

அத்தோடு குறிப்பாக தேர்தல் இடம்பெற்ற இந்த நாளகளில் தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் கிடைக்கவில்லை – என்றார். (ஐ)

# கஞ்சாச் செடி வளர்த்தவர் கைது!

திருகோணமலை, நவ. 02

திருகோணமலை – அன்புவழிபுரம் பிரதேசத்தில் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனத் திருகோணமலை போதை பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரின் வீட்டில் அவர் வளர்த்து வந்த இரண்டு அடி நீளமான கஞ்சாச் செடி பறிமுதல் செய்யப்பட்டதாகவும், கைது செய்யப்பட்டவரிடமிருந்து 105 கிராம் கேரளக் கஞ்சாவையும் தாக்கள் கைப்பற்றியுள்ளனர் எனவும் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் திருகோணமலை ஜமாலியா பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும் அன்புவழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட 30 வயதுடைய நபரெனவும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் நீண்டகாலமாகப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தும் நோக்கத்தில் திருகோணமலை தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனப் போதைப்பொருள் பிரிவினர் தெரிவித்தனர்.

### அமெ. ராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பினார்.

மிலேனியம் சவால் ஒப்பந்தத்தின் பிரதான இலக்கு அமெரிக்க இராணுவத்தை இலங்கையில் புகுத்துவதாகும். அதற்கான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் என்பதே இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், நிதி அமைச்சர் மங்கள சமரவீரவும் கூறுகிறார்கள். இதன் மூலம் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக உருவாக்க முடியும் என்றும் கூறுகிறார்கள்.

இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்காக நில சீர்திருத்தச் சட்டம் அவசியம் என்று கூறுகின்றனர். இந்தச் சட்டம் எமது ஆட்சி காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சட்டத்தில் வெளிநாடுகளுக்கு இலங்கையின் இடங்களை விற்க கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா ஜனநாயகம் பற்றித் தொடர்ச்சியாக பேசும் ஒரு நாடாகும். எனினும் உள்ளூராட்சித் தேர்தல் மூலம் இந்த அரசை மக்கள் புறக்கணித்திருப்பதை அறிந்தும், மக்கள் எதிர்க்கும் அரசுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பது ஏன்?

மிலேனியம் சவால் ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திரக் கட்சி என்பன தற்போது ஒன்றிணைந்துள்ளன.

இதனால் தற்போது இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. எனவே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான அதிகாரம் இந்த அரசுக்கு இல்லை – என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்த தீர்மானம் தெற்கில் பெரும் பரபரப்பு மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக அங்குள்ள சில செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சற்று மந்தமாக இருந்த சஜித்தின் பிரசாரப் போக்கு சந்திரிகாவின் திடீர் – அதிரடி – வரவால், பரபரப்பாகி, சூடுபிடித்து, மீள எழுச்சி கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

சந்திரிகாவின் பெற்றோர் ஸ்தாபித்து, பின்னர் தலைமை வகித்து நடத்திய கட்சி – சந்திரிகாவே பத்து வருடங்களுக்கு மேல் தலைவராக இருந்த கட்டமைப்பு – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே சந்திரிகாவை மறந்திருந்த நிலையில் மீண்டும் ஓர் அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றார் அவர்.

தற்போதைய ஜனாதிபதிப் பதவி மூலம் சு.க.வின் தலைமையைப் பறித்த மைத்திரிபால சிறிசேன, அந்தக் கட்சியை ராஜபக்ஷ குடும்பத்திடம் அடகு வைத்தமையால் தமது பெற்றோர் உருவாக்கிய கட்சி அநாதரவாகி விட்டது என்ற ஆதங்கம் சந்திரிகாவுக்கு.

இன்னும் இரண்டு வார காலத்தில் ஜனாதிபதிப் பதவியை மைத்திரிபால இழந்ததும் அப்போதுள்ள அவரது பலவீன நிலையைப் பயன்படுத்தி கட்சியின் தலைமைப் பதவியை மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து தட்டிப் பறித்து, அதற்குப் புதிய தலைமைத்துவத்தைக் கொடுத்து, அக்கட்சியை பண்டாரநாயக்காக்களின பெயர் சொல்லும் வகையில் மீளெழுச்சி பெற வைப்பதே சந்திரகாவின் இப்போதைய திட்டம்.

ஆனால் அதற்குக் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பின்னால் ஆட்டு மந்தைகள் போல சென்று, அவரது வழிகாட்டுதலில் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவின் கூட்டோடு சரணாகதி அடைந்துவிட்ட சு.க.வினர் ஆதரவு தருவார்களா என்பதே கேள்வி.

அரசியல் செல்வாக்கு மற்றும் மக்கள் ஆதரவு என்ற விடயங்களின் ராஜபக்ஷக்களின் பொது ஜன பெரமுன முன்னணியில் இருக்கையில் –

அடுத்து வரும் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் மக்கள் ஆதரவு பெற்ற பொதுஜனப் பெரமுனவின் கூட்டுக்குப் பின்னால் அணிவகுத்து நிற்பதே தங்களுக்கு வெற்றிக் கனியைத் தேழ்த்தரவல்லது என்பது யதார்த்தமாக விளங்குகையில் –

சு.கவினர் யாராவது கொள்கை ரீதியில் தன்னும் சந்திரிகாவுக்கு பின்னால் சேருவார்களா, கூடுவார்களா என்றெல்லாம் கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஆனால், மைத்திரியை நம்பி அவரது வழிகாட்டலில் பொதுஜன பெரமுன பக்கம் சென்ற பலரும் 'விட்டால் காணும் அங்கிருந்து ஓடி வந்து விடுவோம்' என்ற கணக்கில் சந்திரிகா பக்கம் அணி திரளத் தயாராகிவருகின்றனர்.

ஏன் இந்த அதிரடி மாற்றம், சு.க.வினருக்கு ஏன் இந்தத் தடுமாற்றம் என்று சற்று உள்ளே நுழைந்து தேடிப்பார்த்தோம்.

அதிர்ச்சி கிட்டியது. 'போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடு' – என்ற மாதிரி சு.கவினர் பொதுஜனபெரமுனையைவிட்டு, சந்திரிகாவின் பக்கம் பாயத் தயாராகி வருகின்றமைக்கான பின்னணி புரியத் தொடங்கியது.

சு.க.வுக்கும் மொட்டுக் கட்சிக்கும் இடையே கடந்த 10ஆம் திகதி ஒப்பமிடப்பட்டு, அதன் பின்னரும் இரகசியமாகப் பேணப்பட்டு வந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தான் அதற்குக் காரணம்.

அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இடம் பெறும் நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் மொட்டுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் சு.க.வினருக்கு இடம் கொடுக்கப்படும். ஆனால் 2018 முற்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிடைத்த வாக்குகளைக் கவனத்தில் கொண்டு அதனடிப்படையில் தான் வேட்பாளர் இடங்களை சு.க.வுக்கு வழங்க மொட்டுக் கட்சி அந்த உடன்பாட்டில் இணங்கியிருக்கின்றது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தெற்கில் சுமார் 8 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளே சு.க.வுக்கு கிடைத்தன.

அதன்படி பார்த்தால், இனி நடக்கப்போகும் நாடாளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மொத்த வேட்பாளர்களில் ஆக எட்டு வீதம் வரை இடமே சு.கவுக்குக் கிடைக்கும்.

மொட்டு – சு.க. உடன்பாட்டில் உள்ள இரகசிய அம்சங்கள் இப்போதுதான் வெளியே கசிந்திருக்கின்றமையால், சு.க.வின் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு நிலைமை புரிய ஆரம்பித்திருக்கின்றது.

இந்தக் கூட்டில் இருந்தால் வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்குக் கூடத் தங்களுக்கு இடம் கிடைப்பது துர்லபம் என்பது அவர்களுக்குப் புரிய ஆரம்பித்திருக்கின்றமையால் மெல்ல மைத்திரிபால தலைமையிலான சு.க. பக்கம் இருந்து நழுவி சந்திரிகா பக்கம் வரத் தலைப்பட்டிருக்கிறார்கள் அவர்கள்.

போகின்ற போக்கில், வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வென்றால், மொட்டுக் கட்சிப் பக்கம் இருக்கும் சு.க.வில் ஆக மைத்திரிபால சிறிசேனவும், அவரின் கட்சிச் செயலாளர் தயாசிறி ஜெயசேகரவும் மட்டும்தான் மிஞ்சி இருப்பார்களாம். மிகுதி எல்லோரும் சஜித் பக்கம் நிற்கும் சந்திரிகாவின் பின்னால் திரண்டு சு.கவை மீண்டும் புதிய கட்டமைப்பாக – பண்டாரநாயக்காக்களின் பெயர் சொல்லும் கட்சியாக – மாற்றுவார்கள் என்பது திண்ணம் எனக் குறிப்பிட்டார் சு.கவின் மூத்த பிரதிநிதி ஒருவர். சு.கவின் தலைமையை மீளக் கைப்பற்றி அதைக் கட்டி எழுப்பும் ஒரு calculated risk உடன்தான் சஜித்தைப் பகிரங்கமாக ஆதரிக்கும் அத்தியாயத்தைக் கட்டவிழ்த்திருகின்றார் சந்திரிகா என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

\- மின்னல் -

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, ஈச்சங்குளம், அம்பிவைத்தான் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றின் தற்காலிக வீடு ஒன்றே தீயில் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இந்த வீட்டில் வசித்து வந்த நிலையில், வீட்டில் உள்ளவர்கள் வேலை நிமித்தம் வெளியில் சென்றிருந்தபோதே அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

தீயை கட்டுப்படுத்த அயலவர்கள், கிராம மக்கள் முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை. வீட்டில் இருந்த உடைமைகள், பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவராத நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-100)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் சந்திரிகா முக்கிய வகிபாகத்தை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மைத்திரிபால சிறிசேனவைப் பொதுவேட்பாளராகக் களமிறக்கி அவரை வெற்றியடையச் செய்யும் வரைக்கும் சந்திரிகா அம்மையார் முழு மூச்சுடன் பணியாற்றினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத்தலைவரான முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் மகளான சந்திரிகா, இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்த முதல் பெண் என்ற பெருமைக்குரியவர்.

1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சஜித்தின் தந்தையான அமரர் ரணசிங்க பிரேமதாஸ களமிறங்கினார்.

அவரை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் சந்திரிகாவின் தயாரான அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க போட்டியிட்டார். இருவரும் அரசியல் களத்தில் கடும் சமரில் ஈடுபட்டனர். இறுதியில் பிரேமதாஸ வெற்றிபெற்றார்.

இன்று பிரேமதாஸவின் மகன் சஜித் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். அவருக்கு ஆதரவாக ஸ்ரீமாவோவின் மகள் சந்திரிகா தீவிர பரப்புரைகளில் ஈடுபடவுள்ளார்.

### எதுவும் நடக்கலாம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார், புதிய ஜனநாயக முன்னணியுடன் இணைந்து சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவுள்ளார் என்று நேற்றே செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் சர்வதேச ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளர் சந்திரிகாவிடம் நேற்றுக் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு அவர், சர்வாதிகாரிகளைத் தோற்கடிப்பதற்காக எதுவும் செய்வேன். நாளை எதுவும் நடக்கலாம் என்று பதிலளித்திருந்தார்.

### கோட்டாவின் தோல்வி உறுதி

அதேவேளை, குறித்த செய்தியாளரிடம் சில தினங்களுக்கு முன்னர் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் சந்திரிகா கருத்துத் தெரிவிக்கும்போது, பண்டாரநாயக்க குடும்பத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் ராஜபக்ஷ குடும்பமே ஆகும். அந்தக் குடும்பத்திலிருந்து ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்க முடிவெடுத்தமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். ராஜபக்ஷ குடும்பத்தின் தாளத்துக்கேற்ப மைத்திரிபாலவும் தயாசிறியும் ஆடுகின்றார்கள். இந்த ஆட்டம் நிரந்தரமல்ல. விரைவில் முடிவு கட்டப்படும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ பல கொலைகளுக்குக் காரணமானவர். திருட்டுகளுக்கும் உடந்தையானவர். அப்படிப்பட்டவரை இலங்கை மக்கள் அடியோடு நிராகரிப்பார்கள். அவரின் தோல்வி இப்போதே உறுதியாகிவிட்டது என்று தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தலுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 75 ஆயிரத்து 171 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள். 531 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

நேற்று இரண்டாவது நாளாக தபால் மூல வாக்களிப்புக்கள் இடம்பெற்றன. 267 திணைக்களங்களில் 29 ஆயிரத்து 850 பேர் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

யாழ்.மாவட்டச் செயலகம், பொலிஸ் திணைக்களம் மற்றும் தேர்தல் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி அந்தந்தத் திணைக்களங்களில் தமது வாக்குகளை அளிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் குற்றங்கள் தொடர்பாக 26 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. சிறு சிறு குற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் இடமாற்றம் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதென சிறு குற்றங்கள் அடங்குகின்றன. அதற்கான உரிய தீர்வுகளும் உடனடியாக எடுக்கப்படவுள்ளன.

வழமைபோன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலேயே வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறும், வாக்கெண்ணும் நிலையம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சீரற்ற காலநிலை நிலவுவதனால், நெடுந்தீவில் இருந்து ஹெலி மூலம் வாக்குப்பெட்டிகள் மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டு, அங்கே வாக்கெண்ணும் பணிகள் நடைபெறும்.

எழுவைதீவு மற்றும் அனலைதீவு உள்ளிட்ட தீவுகளில் இருந்து கடற்படையின் பாதுகாப்புடன், வாக்குப் பெட்டிகள் எடுத்து வரப்படும். வாக்களிக்கும் நேரம் 1 மணித்தியாலயத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால், வாக்கெண்ணும் நேரத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்காது.

அருகில் உள்ள வாக்குச் சாவடிகளில் இருந்து வரும் வாக்குப் பெட்டிகள் மிக விரைவாக எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

தூர இடத்து வாக்குப் பெட்டிகள் உரிய நேரத்தில் எண்ணுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இம்முறை தேர்தல் கடமைகளில் 6 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளனர் – என்றார். (ஐ)

## மிலேனியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிலேனியம் சவால் நிதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும், இலங்கை அரசு அதனை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக அனுப்பவேண்டும். இதுவே சர்வதேச அளவில் பின்பற்றப்படும் நடைமுறை என அமெரிக்கத்தூதரகம் நேற்றுவெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் உடன்படிக்கை குறித்து ஆராய்வதற்காக வாய்ப்பு நாடாளுமன்றத்துக்குக் கிடைக்கும் எனவும் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்றம் உடன்படிக்கை குறித்து ஆய்வு செய்யும் காலப்பகுதியில் இலங்கை அரசு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய திட்டங்களை உருவாக்குவதற்குமான அவகாசம் கிடைக்கும் எனவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு மிலேனியம் சவால் உடன்படிக்கை காரணமாக ஒரு கோடி 10 லட்சம் மக்கள் நேரடியாகப் பலன் பெறுவார்கள் என்றும் இதனால் பொருளாதார வளர்ச்சி அர்த்தமுள்ளதாக்கப்படும் என்றும் அமெரிக்கத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு உடன்படிக்கை கையெழுத்திடுவதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு கோரி நேற்று உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 5 தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொஞ்ச விடயத்தைச் சொன்னாலும், அதைச் செய்யும் ஆளுமை கோட்டாபய ராஜபக்ஷவிடம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கொக்குவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலின்போது அதில் போட்டியிடுவோர் வெற்றி பெற்றதும் தங்களால் செய்ய முடிந்தவற்றை மட்டுமே கூறவேண்டும்.

குறிப்பாக ஜனாதிபதியால் என்னென்ன செய்ய முடியுமோ அவற்றையே கூறவேண்டும். ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாடாளுமன்றத்தினால் செய்ய வேண்டிய விடயங்கள், அமைச்சரவையினால் செய்யப்பட வேண்டிய விடயங்கள் எல்லாவற்றையும் தாம் செய்வேன் என அதன் வேட்பாளர் கூறுகின்றார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி இனிவரவுள்ள ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் பலவகையிலும் குறைக்கப்பட்டுள்ளன. அதையும் மனதில் வைத்துத்தான் அறிக்கையை அணுகவேண்டும். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு போன்றவை ஜனாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்டவை. அரசமைப்பு மாற்றம் போன்றவை நாடாளுமன்றத்தால்தான் செய்ய முடியும். சில விடயங்கள் அமைச்சர்கள் சபையால்தான் செய்ய முடியும்.

சஜித்தின் விஞ்ஞாபனத்தில் சில விடயங்கள் ஏற்கனவே உள்ளவற்றைத்தான் கூறியிருக்கிறார். காணாமல் போனவர்களுக்கு நியாயமான தீர்வு, அரச படைகளுக்குத் தேவையற்ற காணிகளை விடுவிப்பதாகச் சொல்லியுள்ளார். அரசியல் கைதிகளை விடுவிப்பதாக சொல்லியுள்ளார்.

பெரமுனவின் விஞ்ஞாபனத்தைப் பார்க்கும்போது அரச, தனியார் காணிகள் யாவும் விடுவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் வைத்தும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என கோட்டாபயவே தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள் விடயங்களில் பரிகாரம் காணப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஐந்து தமிழ்க் கட்சிகளின் 13 கோரிக்கைகளில் 8 விடயங்கள் சஜித்தின் விஞ்ஞாபனத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஒற்றையாட்சி முறையை நிராகரித்து தமிழ்த் தேசத்தை அங்கீகரிப்பது, போர்க் குற்றத்திற்குச் சர்வதேச விசாரணை, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் சர்வதேசப் பொறிமுறை, வடக்கு – கிழக்கில் சிங்கள மயமாக்கல் நிறுத்துதல், மகாவலி குடியேற்றத்தை நிறுத்தல், தொல்லியல் மற்றும் வனவளத் திணைக்களத்தின் காணி அபகரிப்பைத் தடுத்தல் ஆகியன நிராகரிக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் திணைக்களத்தின் அபகரிப்பை நிறுத்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தேவையில்லை. இன்றும் சஜித்தின் கீழுள்ள அமைச்சு அது. இதுவரை தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளை அவர் கண்டு கொள்ளவில்லை. நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் 20 வருடத்தின் முன் சேதமடைந்த வீடுகளை திருத்தி விட்டு குடியேறிய மக்களை நீதிமன்றத்தின் ஊடாக வெளியேற்ற சஜித்தின் கீழுள்ள வீடமைப்பு அதிகாரசபை முயற்சிக்கிறது. அவர்களை வெளியேறும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுவிட்டது.

சஜித் நாளைக்கே இதை நிறுத்தட்டும் பார்க்கலாம். நீதிமன்ற உத்தரவில் தலையிட வேண்டியதில்லை. அந்த வழக்கை பதிவு செய்தவர்கள், அதை வாபஸ் பெற்றாலே போதும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் பலவற்றைச் சொல்வதிலும் பார்க்க செய்யக்கூடியவற்றைச் செய்து காட்டட்டும். கன்னியா, நீராவியடி பிள்ளையார் கோயில் விவகாரங்களில் நாங்கள் நீதிமன்றங்களின் ஊடாக தற்காலிகமாக தீர்வு கண்டோமே தவிர, அரசியல் ரீதியாக எதையும் செய்யவில்லை.

கல்முனை வடக்கு பிரதேச சபையை 3 மாதத்தில் தரமுயர்த்துவார் என ரணில் வாக்குறுதியளித்தார். இன்று எத்தனை மாதம்? சின்ன விடயங்களைக் கூட செய்ய முடியாதவர்கள் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றைச் செய்வார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஒப்பீட்டளவில் கோட்டாபய சொன்னால் செய்யும் வல்லமை கொண்டவர். எல்லாவற்றையும் சொல்வதிலும் பார்க்க கொஞ்சத்தைச் சொன்னாலும் அதை செய்யும் ஆற்றல், ஆளுமை கொண்டவர்கள்.

2009 யுத்தம் முடிந்ததில் இருந்து 2010 ஜனவரி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 17,000 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. 2010 ஜனவரியில் இருந்து 2019 ஒகஸ்ட் வரை 4400 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இன்னும் விடுவிக்கப்படாமல் 3000 ஏக்கர் காணி உள்ளது. ஒப்பீட்டளவில் யார் சாதித்துள்ளார்கள் என்று பாருங்கள் – என்றார். (ஐ-07)

## மைத்திக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினராக உள்ள சாந்த பண்டார பதவி விலகி மைத்திரிக்கு அதற்கான வாய்ப்பை வழங்குவாரென அறியமுடிந்தது.

முன்னதாக டிலான் பெரேரா தனது தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை இராஜினாமா செய்வாரெனக் கூறப்பட்டது. ஆனால் அவர் இறுதிநேரத்தில் தனது முடிவை மாற்றியுள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் விடயத்தில் கடும் போக்காக செயற்பட்ட மைத்திரிக்கு ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் பின்னரும் மேலதிக பாதுகாப்பு வழங்கப்படவேண்டி இருப்பதால் அவரை எம்.பியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன்மூலம் சட்டப்படி அவருக்குக் கூடுதல் பாதுகாப்பை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையைப் பரிசீலித்து வருவதாகவும் அடுத்த 3 நாட்களில் அதனை ஆராய்ந்து சரியான தீர்மானத்தை அறிவிப்போம் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மொழிகளில் சில வேறுபாடுகள் இருக்கலாம் என்பதனாலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அத்தோடு ஜனாதிபதி வேட்பாளர்களிடம் 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பான ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளபோதும் ஒரேயொரு வேட்பாளர் மட்டுமே அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார் என்றும் விக்கி குறிப்பிட்டார். (ஐ)

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கு சேவை ஒப்பந்தம் எனப்படும் அக்சா உடன்படிக்கை, சோபா உடன்படிக்கை மற்றும் மிலேனியம் சவால் நிதிய உடன்படிக்கை ஆகியவற்றுக்கு எதிராகவே நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனம் இலங்கைக்கு வழங்கும் 48 கோடி அமெரிக்க டொலர் நிதியைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை கடந்த 29 ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தது.

இந்த உடன்பாடு தேர்தலுக்கு முன்னர் கைச்சாத்திடப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். இதற்குக் கடும் எதிர்ப்புகளும் வெளியிடப்பட்டன.

இந்த உடன்பாட்டில் உள்ள உள்ளடக்கங்களைப் பகிரங்கப்படுத்தி நாடாளுமன்றில் விவாதத்துக்குக் கொண்டுவரவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு கருத்து தெரிவித்த சஜித் பிரேமதாஸ, நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் எந்தவொரு சர்வதேச உடன்பாட்டிலும் கைச்சாத்திடப்போவதில்லை என்றும் அவை அனைத்தும் தேர்தலின் பின்னர் திருத்தியமைக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கட்டுநாயக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோபோக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

போதைப்பொருள்கள் மற்றும் வெடிப்பொருள்களை கண்டறியக் கூடிய அதிநவீன ரோபோக்கள் உள்ளிட்ட ரூபா 75 கோடி பெறுமதியான உபகரணங்களை சீன அரசு கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி இலங்கைக்கு அன்பளிப்பு செய்திருந்தது. சீனத் தூதுவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இதனை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கமைய இந்த அதிநவீன உபகரணம் சீன அரசால் இலங்கைக்கு வழங்கப்பட்டது. இத்தகைய நவீன உபகரணங்களைப் போதைப் பொருள் தேடுதல்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இலங்கை பாதுகாப்புத் துறையினர் உபயோகிக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

05 மீற்றர் தூரத்திற்குள் இருக்கும் நபர்கள் அல்லது பொருள்களுக்கிடையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிப்பொருள்கள் மற்றும் போதைப்பொருள்களை தன்னிச்சையாக இனங்கண்டு கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட விசேட ரோபோ இயந்திரங்கள் மூன்றும் இதற்குள் உள்ளடங்குகின்றன. இந்த ஒரு இயந்திரத்தின் பெறுமதி 8 கோடி ரூபாவாகும். (ஐ)

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை தபால்மூலம் வாக்களிக்க ஆறு இலட்சத்து 59 ஆயிரத்து 30 பேர் தகுதி பெற்றிருந்தனர்.

இதேவேளை, பொலிஸ் மற்றும் மாவட்ட செயலக ஊழியர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் இடம்பெறும். தபால் மூல வாக்களிப்பை மேற்கொள்ள முடியாத அரச ஊழியர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி தபால் மூலம் வாக்களிக்க முடியும். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## தமிழர் மனதை வெல்லும் உத்தி!

**இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பெரிய கட்சிகளின் வேட்பாளர்களும் தமிழர் தரப்பின் அபிலாஷைகள் – எதிர்பார்ப்புகள் – வேணவாக்கள் – விருப்புகள் – தொடர்பில் தமிழர்களின் தலைவர்களோடு பேசத் தயாரில்லை என்று கூறிவிட்ட பின்னணியில், அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை எதிர்பார்த்து இருப்பதைத் தவிர தமிழ்த் தலைவர்களுக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை.**

**இப்போது இரண்டு வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்து விட்டன.**

**இந்தத் தேர்தலில் சிறுபான்மை இனத்தவர்களின் – குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள் – ஆகியோரின் வாக்குகள் மிக முக்கியமானவை.**

**இரு வேட்பாளர்களுக்கும் இடையிலான போட்டி மிக மிக நெருக்கமானது என்றால் சில சமயங்களில் – கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் போல – சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகள்தாம் வெற்றி, தோல்வியைத் தீர்மானித்து விடுவதாக அமைந்து விடக் கூடும்.**

**இப்போது பிராதன கட்சிகள் இண்டினதும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞானபங்கள் வெளிவந்து விட்ட நிலையில், அவற்றின் அடிப்படையில் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டிய கட்டாயத்தில்– தமிழ்த் தலைவர்களும், தமிழ் மக்களும் உள்ளனர்.**

**பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழர் தரப்பை – தமிழ் மக்களை – கவனத்திலோ, கருத்திலோ எடுத்தாகத் தெரியவில்லை.**

**சிங்கள – பௌத்த பேரினவாதத்தைக் கிளப்பி, அதில் அரசியல் குளிர்காய விரும்பும் ராஜபக்ஷக்கள் தமிழர் தரப்பை உதாசீனம் செய்து – கவனத்தில் எடுக்காமல் விட்டு – தமது தரப்புத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருக்கின்றனர் என்பது திண்ணம்.**

**ஆனால், புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித், தமிழர் தரப்புடனும், தலைவர்களுடனும் உத்தியோகபூர்வமாக – வெளிப்படையாக – பேசாவிட்டாலும், தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை கருத்தில் எடுத்து பல விடயங்களைத் தனது விஞ்ஞாபனத்தில் உள்வாங்கியிருக்கின்றார் என்பது நல்லதோர் சமிக்ஞை. முன்னேற்றம்.**

**தமிழர்களின் பிரதான கோரிக்கை, தமிழ்த் தேசத்தின் தனித்துவம், இறைமை, சுயநிர்ணயம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் விதத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் ஐக்கிய, ஒன்றுபட்ட, பிளவுபடாத இலங்கைத் தீவுக்குள் சமஷ்டி அதிகாரப் பகிர்வு அலகு ஒன்று வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.**

**அது குறித்து சஜித் பிரேமதாஸாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏதும் இல்லை.**

**அதேசமயம், தென்னிலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்புகளும் – ஏன் சஜித் பிரேமதாஸா தாமே கூட – வலியுறுத்தி நிற்கும் ஒற்றையாட்சி முறைமை குறித்தும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் ஏதும் குறிப்பிடவில்லை.**

**ஆனால், அதற்கும் பதிலாக –**

**"தற்போதைய நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் அரசமைப்பு சீர்திருத்த முயற்சிகள், அதற்கான அனைத்துப் பங்குதாரர்களுடனும் இணைந்து தமதமின்றி முடிவுறுத்தப்படும்."**
**– என்று சஜித்தின் விஞ்ஞாபனம் கூறுகின்றமை மிக முக்கிய விடயமாகும்.**

**தற்போதைய நாடாளுமன்றத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றுதல், தேர்தல் சீர்திருத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு முயற்சியே முன்னெடுக்கப்பட்டு வந்தது.**

**இதில், ஒரு நகல் யாப்புக்கான மூல வரைவைத் தயாரித்து, அரசமைப்பு உருவாக்கப் பேரவையாகக் கூடும் நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கும் அளவுக்கு நிலைமை முன்னேற்றம் கண்டிருந்தது.**

**புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் மூன்று முக்கிய விடயங்கள் அடங்கியிருந்த போதிலும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் விடயத்திலேயே பெரும்பாலும் உடன்பாடு – பொது இணக்க நிலைமை – ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.**

**அந்த அரசமைப்பு உருவாக்க விடயத்தில் அதிகாரப் பகிர்வு விவகாரம் பெரும்பாலும் ஏகமனதாகவே முன்னெடுக்கப்பட்டிருந்தது.**

**தமிழர் தரப்பில் பிரதான பங்குதாரராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் பங்கு பற்றியமை மட்டுமால்லாமல், இயன்ற வரை விட்டுக் கொடுப்புடன் இணக்கத் தீர்வுக்கான உடன்பாடுகளுக்கும் இணங்கி வந்திருந்தது.**

**அந்த ஏற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்து, நிறைவேற்றி, நடைமுறைப்படுத்துவோம் என்ற சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபன அறிவிப்பு நிச்சயம் தமிழர் தரப்பை – குறிப்பாகத் தமிழ்க் கூட்டமைப்பை – திருப்தி செய்யும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.**

**பௌத்த மதத்துக்கு முன்னுரிமை குறித்து இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் குறிப்பிட்டாலும், ஏனைய அனைத்து மதங்களும் மற்றும் நம்பிக்கைகளும் பாரபட்சமின்றி, சமத்துவமாக நடத்தப்படும், சம உரிமைகள் உத்தரவாதமளிக்கப்படும், எவ்வித பாகுபாட்டுக்கும் அவை உட்படுத்தப்படமாட்டா என்ற உறுதிப்பாடும் இந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்க அம்சமாகும்.**

**– இவை உட்பட தமிழ்த் தரப்பில் முன்வைக்கப்பட்ட அவர்களின் அபிலாஷைகள் தொடர்பில் கணிசமான விடயங்களுக்கு சாதகமான பிரதிபலிப்புகள் சஜித்தின் தேர்தல் அறிக்கையில் கோடி காட்டப்பட்டுள்ளன.**

**இரண்டு மாகாணங்களை இணைக்க வழி செய்யும் வாசமும் கூட அந்த விஞ்ஞாபனத்தில் நுணுக்கமாக – நுட்பமாக – நுழைக்கப்பட்டிருப்பது தமிழர் தரப்பின் மனங்களை வெல்ல எடுக்கப்பட்ட உத்தியாகும்.**

# யாழ். – தமிழகம் இடையே விமான சேவை வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், நவ. 02

சென்னை – யாழ்ப்பாணம் இடையிலான வணிக விமான சேவைகள், வரும் 10ஆம் திகதி தொடக்கம் இடம்பெறவுள்ளன என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், எச்.எம்.சி. நிமலசிறி, அலையன்ஸ் எயர் நிறுவனத்தின் குறிப்பிட்ட நேர அட்டவணைக்கு அமைய விமான சேவைகள் ஆரம்பமாகும், பகல் நேர விமான சேவை மாத்திரம் இடம்பெறும் என்று அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு இடையிலான ஒருவழி விமானப் பயணக் கட்டணமாக 15 ஆயிரத்து 690 ரூபாவும், அதேசமயம், மறுவழமாக, சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான ஒரு வழி விமான கட்டணமாக 7 ஆயிரத்து 879 ரூபாவும் அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை – யாழ்ப்பாணம் இடையிலான விமானப் பயண நேரம் 32 தொடக்கம் 50 நிமிடங்களாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமானப் பயணங்களுக்கான பயணச்சீட்டுகளை குறித்த விமான நிறுவனங்களின் இணையத்தளங்களின் மூலமாகவும், முகவர்கள் மூலமாகவும் கொள்வனவு செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்நாட்டின் திருச்சி விமான நிலையத்துக்கும் யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்துக்கும் இடையில், வாரத்தில் மூன்று விமான சேவைகளை நடத்தவுள்ளதாக பிட்ஸ் எயர் நிறுவனம் அறிவித்துள்ளது.

நவம்பர் 10ஆம் திகதியில் இருந்து திருச்சி யாழ்ப்பாணம் இடையே இந்த விமான சேவை வாரத்தில் மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளதாக, பிட்ஸ் எயர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னர் வேறு பெயரில், அழைக்கப்பட்ட இந்த நிறுவனம் உள்நாட்டு விமான சேவைகளையும், வெளிநாட்டு சரக்கு விமானப் போக்குவரத்து சேவைகளையும் நடத்தி வருகிறது.

முதல் முறையாக திருச்சி – யாழ்ப்பாணம் இடையில் வெளிநாட்டு விமான சேவையை இந்த நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்ப்பாணம் – கொழும்பு – இரத்மலானை விமான சேவைக்கு ஒரு வழிப் பயணத்துக்கு 7 ஆயிரம் ரூபாவிலிருந்து கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் பிட்ஸ் எயார் தெரிவித்துள்ளது.

# அரச, தனியார் ஊழியர்கள் வாக்களிப்பதற்கு விடுமுறை

## தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 02

அரச, தனியார் துறைகளில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு அவர்களின் தொழில் நடைமுறைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வாக்களிப்பதற்கான விடுமுறையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன் இதன்போது ஊழியர்களின் சம்பளம் மற்றும் தனிபட்ட விடுமுறை விதிகளுக்கு எந்தவித இழப்புகளுமின்றி அந்த விடுமுறைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச மற்றும் தனியார்துறைகளில் பணிபுரியும் ஊழியர்கள் அவர்களது தொழில் நிலையத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்திற்கிடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பு விடுமுறை கால அளவு ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

அதனடிப்படையிலே வாக்களிப்பு நிலையத்திலிருந்து சுமார் 40 கிலோ மீற்றர் அல்லது அதற்கு குறைந்த தூரத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு அரைநாள் விடுமுறையும், 40 கிலோ மீற்றரிலிருந்து 100 கிலோ மீற்றருக்கு இடையிலான தூரத்தில் தொழில்புரிபவர்களுக்கு ஒரு நாள் விடுமுறையும், 100 கிலோ மீற்றலிருந்து 150 கிலோ மீற்றருக்கிடையிலான தொலைவில் தொழில்புரிபவர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றருக்கும் அதிகமான தெலைவில் பணிபுரிபவர்களுக்கு இரு நாள்கள் விடுமுறையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேல குறிப்பிடப்பட்ட தூரங்களைவிட அதிக தூரம் சென்று வாக்களிக்க நேரிடும் ஊழியர்களுக்காக மூன்று நாள்கள் விடுமுறைகள் வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது – என்றுள்ளது.

# சட்டமா அதிபர் அனுமதியுடனேயே மிலேனியம் உடன்பாடு தயாரிப்பு

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



கொழும்பு, நவ. 02

மிலேனியம் சவால் உடன்பாடு சட்டமா அதிபரின் ஒப்புதலுடன் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 48 கோடி டொலர் மிலேனியம் சவால் நிதிக்கொடை உடன்பாட்டுக்கு மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிரணியினர் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையிலேயே நிதியமைச்சு நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முழு செயல்முறைகள் மற்றும், இறுதி உடன்பாடுகள் சட்டமா அதிபரின் வழிகாட்டுதலின் கீழும், சட்ட வரையறைகளுக்குள்ளும் தான் செய்யப்பட்டன.

அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவே, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், இந்த உடன்பாடு குறித்த இறுதிக்கட்டப் பேச்சுக்களில் பங்கேற்றிருந்தது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)




**நாளை**
**03.11.2019**
**ஞாயிற்றுக்கிழமை**
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ 4.46 வரை
திதி : ஸப்தமி முழுவதும்
இராகுகாலம் : 4.34 – 6.04
சுப நேரம் : 9.04 – 10.34

# மிலேனியம் உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டாம்!

## மங்களவிடம் மைத்திரி வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 02

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டாமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி, தொலைபேசியூடாக மங்களவுக்கு அழைப்பை ஏற்படுத்தி இவ்வாறு கோரினார் என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் உடன்பாட்டில் கையெழுத்திட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துவிட்டார். ஆனாலும் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதற்கிடையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓர் ஊடக சந்திப்பில், மிலேனியம் சவால் உடன்பாடு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கையெழுத்திடப் படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துர லிய ரதன தேரர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர்,



ஜனாதிபதியை நேரில் சந்தித்து இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டதால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் ஜனாதிப திக்குத் தெளிவுப்படுத்தினர்.

இதனடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், எந்தவொரு காரணத்துக்காகவும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டாமென அமைச் சர் மங்கள சமரவீரவிடம் ஜனாதிபதி கேட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# அரசியல்வாதிகளும் பயங்கரவாதிகளே!

## மகேஷ் சேனநாயக்க அதிரடி

கொழும்பு, நவ. 02

அரசியல்வாதிகளும் பயங்கரவாதிகள் எனவும் அவர்களிடமிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றுவதற் காகவே தான் தேர்தலில் போட்டியிடுகிறார் எனவும் தேசிய மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி வேட் பாளர் மகேஷ் சேன நாயக்கவின் மக்கள் சந்திப்பு நேற்றுமுன் தினம் திருகோண மலையில் இடம்பெற் றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரி விக்கையில் –

கடந்த 71வருடகாலமாக நம்மைப் பிரித்து அரசியல் நாடகமாடிக் கொண்டிருக்கும் இந்த இரண்டு பிர தான கட்சிகளை நாம் தோற்கடிப்பதற்கான ஒரு சந் தர்ப்பம் இது.

எந்தவொரு நாட்டிலும் இல்லாதவாறு நாட்டை ஆள்கின்ற 225 ஆட்சியாளர்களும் வேண்டாம். ' எமக்கு இராணுவ ஆட்சியே வேண்டும் என மக் கள் தெரிவித்த நாடு எம் நாடு. இவ்வாறு நம்மை இந்த நிலைக்கு கொண்டு வந்தது எமது ஆட்சியா ளர்கள்.

கல்வி, சுதந்திரம், விவசாயம், இளைஞர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. நாட்டு மக்க ளது எதிர்காலமே கேள்விக்குறியான நிலைக்கு எம்மை இந்த அரசியல்வாதிகள் தள்ளியுள்ளார்கள். இதனை நான் ஓர் அரசியல் பயங்கரவாதமாகப் பார்க்கின்றேன்.

எமது காணி, ஒற்றுமை, சமத்துவம், மதம் எல் லாவற்றையும் இவர்கள் உருக்குலைத்தார்கள். இத னால் அரசியல்வாதிகளும் ஒரு பயங்கரவாதிகளே, அவர்களிடமிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றுவதற் காகவே நான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் களமி றங்கியுள்ளேன் – என்றார். (ஐ)

# மஹிந்தவே பிரதமர்!

## சரத் அமுனுகம திட்டவட்டம்

கொழும்பு, நவ. 02

எமது கூட்டணியைப் பொறுத்தவரை நாம் அனை வரும் மஹிந்த ராஜபக்ஷ வையே பிரதமர் பதவிக்காக நிறுத்து வோம் எனக் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவையே பிரதமர் பதவிக்கு நிறுத்துவோம் என ஏகமனதாகத்தீர்மா னித்துள்ளோம். ஜனாதி பதியாக – பிரதமராக நீண்ட கால நாடாளு மன்ற உறுப்பினராக இருந்த மஹிந்தராஜபக் ஷவை எவ்வித கட்டுப் பாடுகளும் இன்றிப் பிர தமராக உருவாக்குவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியை எடுத் துக்கொண்டால்ஜனாதிபதித்தேர்தல் பிரசாரத்தின் ஆரம்ப கட்டத்தில் இருந்தே ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, யார் தமது பிரதமர் என்பதை பெயரிடாது தவிர்த்து வருகின்றார்.

ஐ.தே.க. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் யார் ஐ.தே.கவின் பிரதமர் எனப் பொது



மக்கள் மிகவும் ஆவலாக உள்ளனர் ஆனால் இந்தக் கேள்வியை சஜித் பிரேமதாஸ தவிர்த்தே வருகிறார் – என்றார். (ஐ)

# யாழ். சர்வதேச விமான நிலையத்திலிருந்து 10ஆம் திகதி முதல் நாளாந்த வணிகசேவை

கொழும்பு, நவ. 02

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலை யத்தில் இருந்து முதலில் வணிக விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி முதல் சென்னை, திருச்சி விமான நிலையங்களுக்கு நாளாந்த வணிக விமான சேவை ஆரம்பிக்கப் படவுள்ளதாகச் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அறிவித்துள்ளது. (ஐ)

# சு.கவிலிருந்து சிலர் சஜித்துக்கு ஆதரவு

## கூறுகின்றார் அர்ஜுன

கொழும்பு, நவ. 02

உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் மொட்டை ஆதரிக்க விரும்பவில்லை என அமைச் சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில் –

உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் மொட்டை ஆதரிக்க விரும்பவில்லை. இந்த நிலை மையை சாட்சிகளுடன் எல்பிட்டிய தேர் தல் நிரூபித்தது.

எல்பிட்டிய தேர்தலுக்கு முன்னர்தான் பொதுஜன பெரமுனவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டது. இருப்பினும், எல்பிட்டிய தேர்த லில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சுமார் ஐயாயிரம் வாக்குகளைப் பெற்றது.

அதன்மூலம் சுதந்திரக் கட்சி, பொது ஜன பெரமுனவுக்கு அடிபணியாமல் சுயாதீனமாகச் செயற்படுகின்றது என் பது தெளிவாகின்றது. அதேபோல் கட்சி யின் எதிர்காலத்தைப் பாதுகாக்க விரும்பு வதும் அதனூடாகப் புலப்படுகின்றது.

சிலவேளை பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால் பண்டார நாயக்கவின் உருவப்படத்தைக் கூடப் போட முடியாமல் போகும். அதேபோல் உலகின் முதலாவது பெண்மணி சிறிமாவோ பண்டாரநாயக்க வின் உருவப்படத்தையும் அங்கு தொங்



கவிட முடியாமல் போகும்.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிர்காலத்தில் தமது அரசியல் செயற்பாடு களை முன்னெடுக்கச் சந்தர்ப்பம் வழங் கும் ஒருவரையே ஆதரிக்கவேண்டும்.

அப்படியானால் அதற்காக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மாத்திரமே ஒரே தெரிவு. அதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் எம்மு டன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

எதிர்காலத்தில் பாரிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியைச் சேர்ந்த பலர் அன்னச் சின்னத்துக்கு ஆதரவளிப்பார்கள் – என்றார். (ஐ)

# பதுளைக்கு அதிநவீன ரயில் சேவை நேற்றுக் கொழும்பிலிருந்து ஆரம்பம்

கொழும்பு, நவ. 01

இறக்குமதி செய்யப்பட்ட தேனுவாரா மெனிக்கே எனப்படும் நகரங்களுக் கிடையிலான கடுகதி ரயில் கொழும்பு கோட்டைரயில் நிலையத்திலிருந்து நேற்றுக் காலை பதுளை நோக்கி தனது முதல் பயணத்தை ஆரம் பித்ததாக ரயில் கட்டுப்பட்டு நிலை யம் தெரிவித்துள்ளது.



தேனுவாரா மெனிக்கேயின் ஆரம்ப விழா நேற்றுக் காலை 6.45 மணியளவில் கோட்டை ரயில்நிலையத்தில் நடந்தது. இதன் பின்னர் ரயில் தனது பயணித்தை ஆரம்பித்து பதுளை நோக்கி புறப்பட்டது.

இந்த ரயில் ஒவ்வொரு நாளும் காலை 6.45 மணிக்கு கொழும்பு கோட் டையில் இருந்து புறப்பட்டு மாலை 3.27 மணிக்கு பதுளையை சென்றடையும். அதே ரயில் பதுளையிலிருந்து காலை 7.20 மணிக்கு புறப்பட்டு மாலை 4.03 மணிக்கு கொழும்பு கோட்டையை அடையும் எனவும் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த கடுகதி ரயிலில் காட்சி கூடங்கள் மற்றும் முதலாம், இரண்டாம் ஆசன வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ரயிலில் பிரயாணம் செய்ய விரும்பும் பயணிகள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துக் கொள்ளலாம்.

இந்த ரயில் பொல்ஹாவல, ரம்புக் கன, பேராதனை, கண்டி, கம்பளை, நாவலப்பிட்டியா, ஹற்றன், தலவாக் கலை, நானு ஓயா, அம்பேவல, பட்டி போல, ஹப்புத்தளை, தியத்தலாவ, பண்டாரவளை, எல்ல, தேமோதரை மற் றும் பதுளை ஆகிய ரயில் நிலையங் களில் நிறுத்தப்படும். (ஐ)



# யாழ்ப்பாணத்துக்கே உரித்தான கந்தபுராண கலாசாரம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா

ஆசியாக்கண்டம் பரந்தது விரிந்தது. ஆசியாக் கண்டத்தில் காணப்படும் கலாசாரத்தின் அடிநாதமாக மெய்யியல் இருப்பதாக அறிஞர்கள் கருது கின்றார்கள். இந்த மெய்யியல் பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி இருப்பதை வரலாற்றால் அறிய முடிகிறது. சோதனைகளையும் வேதனைகளையும் எதிர் கொண்டாலும் மெய்யியலை மட்டும் இழந்துவிட விரும்பாத நிலையில் சூழலுக்கு ஏற்ப ஒரு கலாசாரத்தை ஏற்படுத்தி அதனை வளர்ப்பதற்கும் அதனை வாழ்வுடன் இணைத்து நிற்பதற்கும் முயற்சிகள் நடைபெற்றமையையும், அதற்கு தலைமை ஏற்பதற்கு தகுதியானவர் வந்த நிலையினையும் காணமுடிகிறது. இந்த வகையில் ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் – தமிழையும் சமயஇலக்கியத்தையும் சேர்த்துக் கொண்டு வீறுபெற்று ஒரு தனித்துவமான கலாசாரம் எழுந்தது. அதனை யாவரும் போற்றினர். கண்டவர் வியப்புற்றனர். அப்படி யாவரையும் வியக்கும் வண்ணம் செய்ததுதான் முகிழ்த்த கந்தபுராண கலாசாரம் ஆகும்.

ஆசியநாட்டில் இந்தியாவின் நிலை மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். சமயம் , இலக்கியம் , ஆன்மீகம். கலைகள், இந்தியாவின் சொத்துக்களாகும். ஞானிகள் பலரை இந்தியா தந்திருக்கிறது. வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், யாவும் பொக்கிஷங்களாகி அமைந்திருக்கின்றன. சமணம், பௌத்தம், சைவம், வைஷ்ணவம், என்று மதங்கள் பலவும் அவை சம்பந்தமான கருத்து மோதல்கள் பலவித பிணக்குகள் யாவும் இந்தியாவில் இருந்ததை வரலாற்றால் அறிகிறோம். ஆனால் இப்படியொரு நிலை ஈழத்தில் காணப்படவில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருக்கவே இல்லை என்பதும் முக்கியமாகும்.

யாழ்ப்பாணமும் அங்குவாழ்ந்த தமிழ் மக்களும் இந்தியத் தொடர்பை விட்டுவிடவில்லை. அதே வேளை இந்தியாபோல் இருந்திடவும் நினைக்கவில்லை. இந்திய சிந்தனைகளை உள்வாங்கி அவற்றை வைத்துக் கொண்டு தமக்கென ஒரு பண்பாட்டை உருவாக்கிட முனைந்தமை முக்கியத்துவம் மிக்கதெனலாம்.

தமிழ் இலக்கிய நூல்களும் சமய இலக்கிய நூல்களும் இந்தியாவின் பொக்கிஷங்கள் என்பது மிகவும் பெருமைதான். ஆனால் ஈழத்துத்தமிழர்கள் தமிழ் சமய இலக்கியங்களில் காட்டும் ஈடுபாடும் உறுதிப்பாடும் அங்கு காணப்படும் நிலை சற்று தளப்பமாய் இருக்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். அதற்கு அங்கு காணப்படும் சமூகநிலையும், அரசியல் நிலையும் காரணமாகக் கூட இருக்கலாம். என்றாலும் இந்தியாவின் அங்கீகாரம் குறிப்பாக தமிழகத்தின் அங்கீகாரம் பெரிய அங்கீகாரமாக அன்றும் தேவைப்பட்டது. இன்றும் அந்த நிலை தொடர்கிறது என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்து எனலாம்.

சமணத்தாலோ , பௌத்தத்தாலோ வைஷ்ணவத்தாலோ, ஆரியத்தாலோ, திராவிடத்தாலோ , ஈழத்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்து சமூகம் தாக்கமுறும் நிலை ஏற்படவில்லை. அதற்கான சூழலும் அங்கு காணப்படவில்லை. ஆனால் இவையாவும் இந்தியாவில் நிறைந்தே இருந்தன. தமிழகத்தில் இவற்றின் தாக்கம் மிகுந்து காணப்பட்டது என்பதும் கருத்திருத்த வேண்டியது முக்கியமாகும். ஆனால் எங்கிருந்தோ வந்துநின்ற எங்கள் பண்பாட்டுக்கே பொருத்தமில்லா கூட்டத்தால் ஏற்பட்ட வினையால் சமூகத்தில் வேண்டத்தகாத விளைவுகள் வந்து நின்றன. இந்த வினையை வெட்டி எறிந்து தமிழ் சமய பண்பாட்டைக் காப்பாற்றி அப்பண்பாட்டை நிலை நிறுத்த வேண்டிய கட்டாயமே ஈழத்தில் குறிப்பாக யாழ்மண்ணுக்கு தேவையாய் இருந்தது. அந்த நிலையில் ஒருவர் வந்து நின்றார். அவர்தான் நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர். அவரால் உருவாக்கப் பட்டதுதான் கந்தபுராண கலாசாரம்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்னும் அந்நியர் வருகையினால் யாழ்ப்பாணத்தின் கோலமே மாறியது. சைவசமயம் பதறியது. கோவில்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. கிறீத்தவம் தலைவிரித்து நின்றது. மதம் பரப்பும் போதகர்கள் மதம்பிடித்து நின்றார்கள். சைவமும் தமிழும் தமிழர் தம் வாழ்வும் ஊசலாடியபடியே காணப்பட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் தங்களின் சமய நடவடிக்கைகளை செய்ய முடியா நிலைக்கு ஆளாக்கப் பட்டார்கள். காலங்காலமாய் கடைப்பிடித்து வந்த பண்பாடு அவர்களின் கண் முன்னாலேயே சிதறுண்டு போகும் நிலையே காணப்பட்டது.

சைவத்தைக் கடைப்பிடித்து, தமிழ் சமய இலக்கியங்கியங்களை உயிரென்று எண்ணி வாழ்ந்தவர்கள் அந்நியச் சூறாவளியினால் அவதிக்கு ஆட்படும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். கோவில்கள் தோறும் கந்தபுராணம் படிக்கப்பட்டது. கந்தனுக்குரிய விரதங்களை மக்கள் மிகவும் பக்குவமாக அனுட்டித்து வந்தார்கள். தமிழும் சமயமும் மலர்ந்தும் விரிந்தும் நல்லதொரு பண்பாடு ஒளிவிட்டு இருந்தது. ஆனால் அவை யாவுமே கேள்விக்குறியாகியதால் மக்கள் திசையறியா கலமாக இருந்தார்கள்.

சமணத்தை நன்கு கற்று அதன் தலைமைப் பீடத்தில் இருந்தவர்தான் நாவுக்கரசர். அதே நாவுக்கரசர்தான் சைவத்தைக் காத்திட உழவாரப் படையினை கையில் ஏந்தி சமணத்தை எதிர்த்து சைவத்தின் காவலனாக வந்து நின்றார். இதன் காரணத்தால் திருநாவுக்கரசு நாயனாராக சைவத்தமிழ் உலகில் இன்று வரை போற்றுதலுக்கு உரியவராக நிற்கிறார். அப்பர் பெருமான் என்று சைவர்கள் அவரை அழைப்பதில் அகநிறைவு எய்துகிறார்கள் எனலாம்.

அப்பரைப் போல ஒருவராக ஆறுமுக நாவலரும் அக்கால யாழ்ப்பாண நிலையில் சைவத்தைக் காத்திட வந்து நிற்கிறார். நாவர் ஆங்கிலத்தில் கற்றார். கிறீத்தவ சூழலில் அவர் கற்றல் நிகழ்ந்தது. கிறீத்தவத்தை நன்கு தெரிந்தவர் ஆகிறார். அதனால் கிறீத்தவ வேதாகம நூலான பைபிளை தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றலையும் பெற்று நிற்கிறார். முழுக்க முழுக்க கிறீத்தவ சூழலில் நின்ற ஆறுமுகநாவலர் மனம் முழுவதும் சைவமே நிறைந்து நின்றது. இதனால் சைவத்தை காத்திட சைவ தமிழ் இலக்கியங்களை காத்திட நாவலர் வீறுகொண்டு எழுகின்றார். அந்த எழுச்சி தந்த கலாசாரமே யாவராலும் கந்தபுராண கலாசாரம் என்று போற்றுதலுக்கு உரியதாக விளங்கிறது எனலாம்.

தமிழ் இலக்கியங்களை தமிழ் இலக்கணத்தை சைவ இலக்கியங்களை ஆறாத காதலுடன் ஐயமகற்றியே ஆறுமுக நாவலர் கற்றார். ஆறுமுகம் என்னும் பெயர் கொண்டவர் தமிழ்நாடு சென்று ஆற்றிய சொற்பெருக்கை கண்ணுற்ற திருவாவடுதுறை ஆதீனமே நாவலர் என்னும் பட்டத்தை அளித்து ஆறுமுகத்தை அங்கீகாரம் செய்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து ஆறுமுகமாக சென்றவர் ஆறுமுகநாவலர் என்னும் கௌரவத்துடன் திரும்புகின்றார். தமிழகத்தின் அங்கீகாரத்துடன் அவரின் பணிகள் ஆரம்பிக்கப்படுவதும் மனங்கொள்ளத்தக்கதாகும். அங்கீகாரம் பெற்றாலும் யாழ்ப்பாணத்தில் அவரினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஈழம் முழுவதற்குமே பெரும் பயனை வழங்கியது என்பதை மறுத்துவிட முடியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவிலுள்ள ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளை நாவலர் காலம் என்று குறிப்பிடலாம். பொதுவாக இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டிலும் சிறப்பாக ஈழத்திலும் நிலவிய சூழ்நிலையே ஆறுமுக நாவலரைத் தோற்றுவித்தது எனலாம். பல இலட்சம் தமிழ்ச் சைவர்கள் ஆறுமுகநாவலரின் காலத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் தமிழ்ச் சைவர்களில் ஒருவரே ஆறுமுகநாவலர் ஆகிவிட முடிந்தது. இங்குதான் நாவலரின் பெருமை புலப்பட்டு நிற்கிறது எனலாம்.

பல்லவர் , பாண்டியர், சோழர், ஆரிய சக்கரவர்த்திகளால் சைவமும் தமிழும் பாராட்டி வளர்க்கப்பட்டன. பாண்டியர் வீழ்ச்சியின் பின்பு சைவத் தமிழ் மன்னரால் தலையெடுக்க முடியாமற் போய்விட்டது. பதினான்காம் நூற்றாண்டின் பின் சைவத் தமிழர் பிறர் தயவில் வாழக் கற்றுக் கொண்டனர். பதினேழாம் நூற்றாண்டு முற்பகுதி வரை யாழ்ப்பாணத்தில் சைவத் தமிழர் ஆட்சி இடம் பெற்றிருந்தது. தமிழகத்தில் ஒரு சாராரே சைவராக இருந்தார்கள். அவர்களுள் இன்னொரு சாரார் வைஷ்ணவத்தை தழுவியிருந்தார்கள். சைவசித்தாந்தம் செல்வாக்கு பெற்றிருந்தாலும் வேதாந்தமும் செல்வாக்குடன் அங்கு விளங்கியது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

இப்படியான ஒரு சூழல் காணப்பட்டாலும் – அங்கிருந்த நிலை பாரம்பரிய தமிழ்க் கலாசாரத்தை விட்டுவிடாமல் அதனுடன் பிணைந்தே இருந்த காரணத்தால் – ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தோன்றிய சைவத் தமிழ் இயக்கம் போன்ற ஒன்று இந்தியாவில் தோன்ற வில்லை என்பது மனமிருத்த வேண்டிய முக்கிய விடயமாகும். சமரச சன்மார்க்க இயக்கங்கள் உருவாவதற்கே இந்தியச் சூழ்நிலை வழிவகுத்தது எனலாம்.

இந்தியாவின் செல்வாக்கு ஈழத்தில் காணப்பட்டாலும் ஈழத்தின் சமூகநிலை இந்தியா போன்று இல்லாத காரணத்தால் இங்கு உருவான பண்பாடும் வித்தியாசமானதாகவே அமையும் நிலை ஏற்பட்டது எனலாம். புராணங்களில் கந்தபுராணத்தைப் போற்றும் மனப்பாங்கு தமிழ்நட்டைவிட யாழ்ப்பாணத்தில் நிறைந்தே இருந்தது எனலாம். கந்தபுராணத்தைச் சொந்த புராணமாக இங்குள்ள சைவர்கள் போற்றினார்கள். கோவில்கள் தோறும் கந்தபுராணத்தைப் படித்து அதன் விளக்கத்தை விவரமாக எடுத்துரைக்கும் ஒரு பணி தெய்வீகப் பணியாக யாழ்ப்பாண மக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையால் யாழ்ப்பாணத்தின் நிலையே தலைகீழானது. கோவில்கள் இடிக்கப்பட்டன. மதமார்றம் கட்டாயம் ஆக்கப்பட்டது. கல்வியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. பாரம்பரிய பண்பாடு கேலிக்கு உரியதாக்கப்பட்டது. சுதேசம் தொலைந்து போகும் நிலை உருவானது. அந்நியரின் கெடுபிடியால் பலர் மதம் மாற்றப் பட்டனர். பணத்துக்கும், பட்டத்துக்கும், பதவிக்கும், உயர் அந்தஸ்துக்கும் என்று பலர் மதத்தை, பண்பாட்டை துறக்கும் நிலை உருவாக்கப்பட்டது. பயத்தின் காரணமாயும் இந்த வலைக்குள் பலர் மாட்டுப் பட்டார்கள். களப்பிரர் காலம் போல ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு இருண்ட காலமே நிலவியது எனலாம்.

தமிழ் படிக்க முடியாத நிலை. சைவத்தை கைக்கொள்ள முடியாத நிலை. திருமுறைகளை ஓத முடியாத நிலை. விரதங்களை அனுட்டிக்க முடியாத நிலை. சைவர்களாய் தமிழர்களாய் வாழுவதே மிகவும் கஷ்டமாய் ஆகிவிட்ட நிலை. வேதநெறி தளைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க ஒரு குழந்தை புனிதவாய் மலர்ந்து அழுதது, நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்று ஒரு குரல் எழுந்து நின்றது. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் அவ்வேளை ஒரு குரல் எழுந்தது. அந்தக் குரல்தான் ஆறுமுகநாவலர் குரலாகும்.

நாயன்மார்கள் ஊர்கள்தோறும் சென்று பக்திப் பரவசம் நல்கும் பாடல்களைப் பாடி மக்களிடம் சமய நல்லுணர்வையும் நல் வாழ்க்கை முறைகளையும் சேர்ப்பித்தார்கள். அவர்களின் அர்ப்பணிப்பால் மக்களிடம் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டது. புத்துணர்ச்சி உருவானது. பக்தியென்னும் இயக்கம் வீறு கொண்டு எழுந்தது. தமிழும் வளர்ந்தது. சமயமும் வளர்ந்தது. சமூகத்திலும் நல்லதொரு மாற்றமும் விளைந்தது. கலங்கிய சமூகம், தடுமாறிய சமூகம், நிதானம் அடைந்தது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்னும் நம்பிக்கையும் பிறந்தது. நற்றமிழை நாவாரப் பேச வேண்டும். நற்றமிழால் இறைவனை துதிக்க வேண்டும். நற்றமிழும் சமயமும் இரண்டு கண்கள் என்னும் உணர்வும் எல்லோர் மனதிலும் ஊற்றெடுக்க வைக்கப்பட்டது.

நாயன்மார்கள் காலம் பாடல்கள் கோலோச்சிய காலம். அதனால் எதைச் சொல்வதாக இருந்தாலும் அதற்கு வழி பாடல் என்னும் ஊடகம்தான். ஆனால் நாவலர் காலம் அப்படியானது அன்று. அதனால் நாவலர் அவர்கள் தனது சமய தமிழ் சமூகப் பணிகளுக்கு உரைநடையினையே உறுதுணை ஆக்கினார். பேச்சு, எழுத்து, விளக்கம், யாவும் நாவலரின் உத்வேகமான உரைநடை போக்கில் வெளிவந்து நின்றது.

அன்று யாழ்ப்பாணம் இருந்த சூழலில் ஆறுமுக நாவலர் மட்டும் உருவாகி இருக்காவிட்டால் இன்று ஈழத்தில் சைவமே இருந்தி ருக்காது. தமிழும் அதுசார்ந்த பண்பாடும், தமிழ்சைவ இலக்கியங்களும் காணாமலேயே போயிருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை எனலாம்.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே – எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்க ளெங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்தன் அறிவெங்கே அறை.

இந்தப்பாடலே இதற்குத் தக்க சான்றாகி நிற்கிறது அல்லவா !

இந்தியாவில் தோன்றிய முனிவர்கள் கண்ட பழைமையான கலாசாரம் பண்பாடு சில நெருக்கடிகளால் தெற்கு நோக்கி நகரத்தொடங்கியது. அக்கலாசாரம் சற்று தங்கி இருப்பதற்கு ஓர் இடம் கிடைத்ததென்றால் அது யாழ்ப்பாணம் என்பதுதான் பொருத்தமாகும். அதற்குக் காரணம் நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்ட கந்தபுராண கலாசாரம் என்றேதான் சொல்லலாம்.

இந்தக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய்நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராச வசியம், முதலிய பயன்களைப் பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம் ; முக்காலும் சத்தியம் என்பது நாவலர் பெருமானின் கருத்தாகும்.

நாட்டுக்கு வருகின்ற இடையூறுகளினின்றும் சைவத்தையுந் தமிழையும் பாதுகாத்திட உதவியது. பாதுகாத்தது. பாதுகாத்து வைக்கின்றது. கந்த புராணம் ஒரு கற்பதரு , அது வேண்டுவார் வேண்டுவதை எந்தக் காலத்திலும் ஈவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. விலங்கு நிலையிலிருக்கும் மனிதனை மனதனாக்கி மனிதர்களுக்கு மேலே தேவர்களுக்கும் அப்பாலே வழி நடப்பதற்கும் வழி செய்வது கந்தபுராணம்.

இப்படிப்பட்ட கந்தபுராணம் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு சைவாலயத்திலும் மடாலயங்களிலும் வருடந்தோறும் விதிப்படி படித்துப் பொருள் சொல்லப்பட்டுவந்தது. வருடத்தில் மூன்று மாதங்கள் கந்தபுராண காலமாக இருக்கும். ஆண்களும் பெண்களும் காப்புக்கட்டி விரதம் இருந்து கந்த புராணத்தைக் கேட்பார்கள். ஊர்கள் தோறும் இருக்கும் கோவில்களில் எல்லாம் இதனை கண்டு கொள்ளக் கூடிய ஒருநிலை காணப்பட்டது. சைவசமயத்தில் துறைபோனவர்கள், தமிழில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்கள், சிவதீட்சை பெற்றவர்கள் , ஆசாரசீலர்கள், கந்தபுராணத்தை ஒருவர் இராகத்துடன் படிக்க இன்னொருவர் அதற்குரிய விளக்கங்களை சொல்ல அங்குள்ளவர்கள் பெரும் பயனைப் பெற்று வந்தார்கள். இதனால் சமயம் வளர்ந்தது. தமிழும் வளர்ந்தது. ஒழுக்கம், கட்டுப்பாடு, உயர்சிந்தனை, பக்தி, அறம், நேர்மை என்று இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத பண்புகள் மக்களின் உள்ளத்தில் பதியும் நிலை உருவானது என்பது மிகவும் கவனிக்க வேண்டிய வியமெனலாம். இப்படி மிகவும் சிறந்து விளங்கிய பண்பாட்டுக்கு பெரும் இடையூறாக வந்து நின்றதுதான் அந்நியர் என்னும் சூறாவளி ஆகும்.

(7 ஆம் பக்கம் பார்க்க..)

### புதிய அதிர்ச்சித் தகவல்

# இந்தியப் பிரமுகர்கள் உட்பட உலகம் முழுவதும் பலரின் ‘வாட்ஸ் – அப்’ தகவல்கள் ஊடுருவி உளவு பார்க்கப்பட்டன

புதுடெல்லி,நவ.02

இந்திய பத்திரிகையாளர்கள், மனித உரிமைவாதிகள் உள்பட உலகம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் ‘வாட்ஸ் – அப்’ தகவல்கள் உளவு பார்க்கப்பட்டன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து இந்திய மத்திய அரசு விளக்கம் கேட்டுள்ளது.

‘பேஸ்புக்’ நிறுவனத்துக்குச் சொந்தமான ‘வாட்ஸ் – அப்’ செயலி, தகவல்களையும், வீடியோக்களையும் பகிர்வதற்கு பயன்படுகிறது. உலகம் முழுவதும் 150 கோடி பேர் ‘வாட்ஸ் – அப்’ பயன்படுத்தி வருகிறார்கள். இந்தியாவில் மட்டும் 40 கோடி பேர் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில், ‘வாட்ஸ் – அப்’ நிறுவனம் நேற்று முன்தினம் அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டது. உலகம் முழுவதும் பலரது ‘வாட்ஸ் – அப்’ தகவல்கள் உளவு பார்க்கப்பட்டன என்று அது கூறியது.

இதுகுறித்து ‘வாட்ஸ் – அப்’ கட்டமைப்பின் சார்பில் கூறப்பட்டவை வருமாறு:–

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. என்ற கண்காணிப்பு நிறுவனம், ‘பெகாசஸ்’ என்ற உளவு மென்பொருளைத் தயாரித்துள்ளது. அந்த மென்



பொருளைப் பயன்படுத்தி, அடையாளம் தெரியாத சில நிறுவனங்களின் உளவாளிகள், உலகம் முழுவதும் 1,400 பேரின் மொபைல் போன்களில் ஊடுருவி தங்கள் வசப்படுத்தி உள்ளனர். அந்த போன்களில் ‘வாட்ஸ் – அப்’ மூலம் பரிமாறப்படும் முக்கியமான தகவல்களைத் திருடி உள்ளனர். ‘வாட்ஸ் – அப்’ தகவல் பரிமாற்றங்களை உளவு பார்த்துள்ளனர்.

உளவு பார்க்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்கள் 4 கண்டங்களில் இருக்கிறார்கள். இவர்களில், இந்திய பத்திரிகையாளர்கள், மனித உரிமைவாதிகள் மற்றும் தூதரக அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் எதிரிகள், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோரும் அடங்குவர்.

இந்தத் தகவல் அறிந்தவுடன் என்.எஸ்.ஓ. நிறுவனம் மீது அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளோம். மேலும், உளவு பார்க்கப்பட்டவை எனக் கருதப்படும் 1,400 பேரின் மொபைல் போன்களுக்கும் விசே ‘வாட்ஸ் – அப்’ செய்தி அனுப்பி, உஷார்படுத்தி உள்ளோம். – இவ்வாறு ‘வாட்ஸ் – அப்’ நிறுவனம் கூறியது.

ஆனால், இந்தியாவில் எத்தனை பேர் உளவு பார்க்கப்பட்டனர் என்ற விவரத்தை ‘வாட்ஸ் – அப்’ தெரிவிக்கவில்லை. யாருடைய உத்தரவின்பேரில், உலகம் முழுவதும் உளவு பார்க்கப்பட்டது என்ற விவரத்தையும் அது கூறவில்லை.

பயனாளர்களின் அடிப்படை அந்தரங்க உரிமைகளை பாதுகாக்க ‘வாட்ஸ் – அப்’ உறுதி பூண்டுள்ளதாக அதன் தலைவர் வில் கேத்கார்ட் தெரிவித்துள்ளார். உளவு விவகாரத்தை விசாரிக்க ‘வாட்ஸ் – அப்’புக்கு டொரண்டோ பல்கலைக் கழகத்தில் உள்ள சிட்டிசன் ஆய்வுக்கூடம் உதவி செய்துள்ளது.

இந்நிலையில், உளவு மென்பொருளை உருவாக்கியதாக கூறப்படும் இஸ்ரேல் நிறுவனமான என்.எஸ்.ஓ. இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

இதற்கிடையே, இந்த உளவு விவகாரம், இந்தியாவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ‘வாட்ஸ் – அப்’ நிறுவனத்திடம் மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் விளக்கம் கேட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு குறித்தும், இந்தியாவில் எத்தனை பேர் இவ்வாறு உளவு பார்க்கப்பட்டனர் என்பது பற்றியும் விரிவான விளக்கத்தை நவம்பர் 4 ஆம் திகதிக்குள் அளிக்குமாறு ‘வாட்ஸ் – அப்’ நிறுவனத்துக்கு இந்தியத் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் கடிதம் எழுதி உள்ளது. அதே சமயத்தில், உளவு விவகாரம் தொடர்பாக, மத்திய அரசை காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

# நகைச்சுவை நடிகர் வழுக்கி விழுந்து மரணம்



நூறுக்கும் மேற்பட்ட தென்னிந்தியப் படங்களில் நகைச்சுவை நடிகராக நடித்துள்ள ஜெயச்சந்திரன் சென்னையில் குளியலறையில் வழுக்கி விழுந்து மரணம் அடைந்தார். அவருக்கு வயது 66. புதன் இரவு படப்பிடிப்புக்குச் சென்று வீடு திரும்பிய ஜெயச்சந்திரன், மறு நாள் காலை குளியலறைக்குச் சென்றபோது எதிர்பாராத வகையில் வழுக்கி விழுந்தமையால் அவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

உடனே அவரது குடும்பத்தினர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆனால் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டார் எனக் கூறப்படுகிறது. உயிரிழந்த ஜெயச்சந்திரனுக்கு லட்சுமி என்ற மனைவியும், ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்,

நடிகர் சங்கம் சார்பில் நடிகர் விஷால், பொன்வண்ணன் ஆகியோர் நேரில் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

வடிவேலுவுடன் நடித்த நகைச்சுவை நடிகர் கிருஷ்ண மூர்த்தி என்பவர் சமீபத்தில் படப்பிடிப்பின் போது திடீரென மாரடைப்பால் மரணம் அடைந்த நிலையில், தற்போது மேலும் ஒரு நகைச்சுவை நடிகர் மரணமடைந்தமை திரைத்துறையினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# டெல்லி விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொதிக்குள் ஆர்.டி.எக்ஸ். ரக வெடிப்பொருள்கள்?

புதுடெல்லி,நவ.02

டெல்லி விமான நிலையத்தில் பீதியை ஏற்படுத்திய பையில் ஆர்.டி.எக்ஸ். வெடிபொருள்கள் இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

தலைநகர் டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில், நேற்று அதிகாலை 1 மணியளவில் கேட்பாரற்று கருப்பு நிறப் பை ஒன்று கிடந்தது.

இதைக் கவனித்த மத்திய தொழிற்பாதுகாப்பு படையினர், பையைக் கைப்பற்றி சோதனை நடத்தினர். இதனால், விமான நிலையத்தில், பயணிகள் வெளியே செல்ல சிறிது நேரம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பையில், ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்துகள் இருக்கின்றன எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதையடுத்து, வெடிகுண்டைச் செயலிழக்க வைக்கும் பெட்டியில் அது வைக்கப்பட்டுள்ளது. எனினும், வெடிபொருளின் உண்மையான தன்மை இன்னும் கண்டறியப்படவில்லை என்று தகவல்கள் கூறுகின்றன. 24 மணி நேர கண்காணிப்பிற்கு பிறகே, வெடிபொருள் குறித்த உண்மையான தகவல் தெரியவரும் என்று கூறப்படுகிறது. வெடிபொருளுடன் பை கைப்பற்றப்பட்டுள்ளதால், டெல்லி விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலே சைவ சமயிகளுள்ளும் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர்கள் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்து மதத்திற் புகுந்தவருள்ளும் சைவ சமயத்தில் உட்பற்றற்றவர் அரியர் ஆதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னை எனிற் கூறுவதும் :

எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்கினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்கியம் கந்தபுராணத்திலுள்ள பதியிலக்கணத்திருவிருத்தங்களை கேட்டல்சிந்தித்தல்களினால் இவர்கள் உள்ளத்து ஊற்றெடுத்த மெய்யுணர் வேயாம்.

இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கம் செய்யும் கோயில்கள் மிக அரியன; இத் தேசத்திலே அது செய்யப்படாக் (யாழ்ப்பாணத்தில்) கோயில் இல்லை. இந்தியாவிலே வித்துவான்கள், சைவ சமய குருமார் முதலியோர்களுள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தவர் சிலரே; இத் தேசத்திலோ (யாழ்ப்பாணத்தில்) பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர் என்று நாவலர் பெருமான் அவர்கள் யாழ்ப்பாணச் சமய நிலை என்னும் நூல் வாயிலாக வெளிப்படுத்தி இருப்பது மனங்கொள்ளத் தக்கதாகும். நாவலருடைய காலத்தில் கந்தபுராணப் படிப்பு மிகவும் உச்ச நிலையை அடைந்தது.

பெரியபுராணத்தைக் கோவில்கள் தோறும் சென்று பிரசங்கம் செய்தவர் நாவலர் பெருமான் அவர்கள். பெரியபுராணத்தை யாவரும் படிக்க வேண்டும் என்னும் பேரவாவினால் அதனை வசனநடையில் ஆக்கியும் அளித்திருக்கிறார்.

ஆனால் அவர் கையிலெடுத்தது கந்தபுராணத்தையே ஆகும். அதற்கு என்ன காரணம் என்பதும் ஆராயப்பட வேண்டியதே. தேவர்களை அசுரர்கள் துன்புறுத்தி பல தொல்லைகளைக் கொடுத்தார்கள். தேவர்களின் கோட்பாடுகளைச் சீரழித்தார்கள். இந்த நிலையை அன்னியர் வருகையுடனும் அவர்களின் அட்டூழியத்துடனும் நாவலர் பெருமான் ஒப்பிட்டிருக்கலாம். தேவர்களைக் காத்து, ஆணவநிலை நின்ற அசுரர்களை அழித்து, அறத்தை நிலைநாட்டிட கந்தப் பெருமான் அவதாரம் செய்கிறார் என்பதையே கந்த புராணம் காட்டி நிற்பதால் அந்நிய அசுரர்களை அகற்றி சைவமென்னும் தர்மத்தையும் உயிரன்ன தமிழையும் பண்பாட்டையும் காத்திட கந்தபுராணம் நிச்சயம் உற்ற துணையாகும் என்ற நம்பிக்கையே கந்தபுராணத்தைக் கையில் எடுப்பதற்கும் அதன்வழி ஒரு புதுக் கலாசாரம் உருவாவதற்கும் நாவலர் பெருமானின் எண்ணமாகக் கூட இருந்திருக்கலாம் அல்லவா.

கந்தபுராண கலாசாரம் என்பது ஆறுமுகநாவலருடன் நின்றுவிடவில்லை. அவரின் மரபைக் கைக்கொள்ளும் பெரிய பரம்பரையினையே உருவாக்கி விட்டது எனலாம். ஆறுமுக நாவலரின் பணிகள் பன்முகப்பட்டன. பழைய நூல்களைப் பதிப்பித்தமை. காலத்துக்கு ஏற்ப தமிழ் இலக்கியங்களை குறிப்பாக சைவ இலக்கியங்களை வசனநடையில் ஆக்கியமை.இலக்கணத்தை இக்காலத்தவர்களும் இலகுவாக விளங்கும் வண்ணம் நூல்களை ஆக்கியமை. பாடசாலைகள் நிறுவி சைவத்தையும் தமிழ் பண்பாட்டையும் வருங்கால சந்ததியினருக்கு பதியச் செய்தமை. தமிழுக்கென்று நல்லதோர் வசனநடையினை அறிமுகம் செய்து வசனநடை கைவந்த வல்லாளர் ஆகியமை.பாடத்திட்டங்களை ஆக்கி இளையோர் நன்னெறிவழியில் வளர்வதற்கு வழி சமைத்தமை. அச்சுக்கூடங்களை நிறுவி எழுத்துப்பிழை இல்லாமல் தமிழில் நூல்களை அச்சிட்டு வெளியிட்டு சாதனை காட்டியமை.

அஞ்சாமை, தூங்காமை, களங்கங்கண்டு பொறுக்காமை, பொய்மை ஏற்காமை, ஒழுக்கத்தை இழக்காமை, ஆறுமுக நாவலரின் வாழ்க்கை முறையாக அமைந்தது எனலாம். பிரமச்சாரியாகவே வாழ்ந்தார். இல்லறத்தைத் துறந்தார். நல்லறத்தை ஏற்றார். சொல்லிவிட்டு நிற்கவில்லை. சொல்லியபடி வாழ்ந்தும் காட்டினார். அறுபத்து மூன்று நாயன்மாருடன் ஆறுமுகநாவலரையும் இணைக்கும் வழக்கமும் காணப்படுகிறது.சமயகுரவர் நால்வருடன் ஐந்தாங் குரவராக ஆறுமுகநாவலர் அவர்களை ஏற்கும் நிலையும் காணப்படுகிறது.

ஆறுமுகநாவலர் அவர்கள் இரண்டு பெரிய குறிக்கோள்களைத் தம் இளம்பருவத்திலே உருவாக்கிக் கொண்டார். தமிழன் என்ற பெருமையோடு தலைநிமிர்ந்து வாழ வைக்கும் தாய்மொழி வளர்த்தலும், இம்மைக்கும் மறுமைக்கும் பயன்களை நல்கும் சமயத்தைக் காத்தலும் ஆகிய குறிக்கோள்கள் இரண்டுமே எனலாம். இவற்றைத் தவிர வேறென்றையும் அவருடைய உள்ளம் இடந்தரவில்லை என்றே கருத முடிகிறது. தமிழ் சமயம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள்.அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன். அவை வாழப் பணி புரிதலே என் வாழ்வின் குறிக்கோள் என்று ஆறுமுகநாவலர் புகன்று நிற்பதுதான் கந்தபுராண கலாசாரத்தை உருவாக்கிட உள்நின்ற சக்தி எனலாம். ஆசியப் பண்பாட்டில் சைவத்தையும் சைவத்தமிழ் இலக்கியங்களையும் காத்து அதற்கென ஒரு தனியான பண்பாடாக கந்தபுராண கலாசாரம் விளங்குகிறது என்பதும் அதனை தாங்கி நிற்கும் யாழ்ப்பாணமும் கருத்தில் இருத்தப்பட வேண்டியது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். அந்நியரின் வருகையால் யாழ்ப்பாணத்தின் நிலையே தலைகீழானது. மக்களின் கோலங்கள் அலங்கோலங்கள் ஆகின. இந்த வேளை இறைவனின் அனுக்கிரகத்தால் ஆறுமுகநாவலர் ஆறுதலாய் தேறுதலாய் அங்கு வந்து நின்றார்.

ஏற்கனவே கந்தபுராணம் என்பது பரம்பரையில் ஊறிய காரணத்தால் அந்தப் பரம்பரையில் வந்துநின்ற நாவலரின் இரத்தத்திலும் ஊறியே காணப்பட்டது. கந்தபுராணம் யாழ்ப்பாணத்தவர்களை மீண்டும் காப்பாற்றும் வல்லமை மிக்கது என்று ஆறுமுகநாவலர் எண்ணினார். ஆகவே சொந்தப் புராணமாக கந்தபுராணத்தையே நாவலர் பெருமான் துணையாக்கி அதன் வழியில் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைக் காத்து உயிர்ப்புறச் செய்யும் பணியில் உழைக்கத் தொடங்கினார். அவரின் உழைப்பினால் யாழ்ப்பாணத்தின் பண்பாடு காப்பாற்றப்பட்டது. அந்தப் பண்பாட்டினைக் காத்திட அவர் கையாண்ட வழிமுறைகளினால் முகிழ்த்து வந்ததுதான் கந்தபுராண கலாசாரம் ஆகும்.

# கந்த சஷ்டியில் சூரசம்ஹாரம் நடப்பது ஏன்?



கந்த சஷ்டி விழா முருகன் ஆலயங்களில் களைகட்டியுள்ளது. பக்தர்கள் காப்பு கட்டி விரதத்தை தொடங்கியுள்ளனர். சூரனை வேல் கொண்டு வதம் செய்த முருகனின் வெற்றியை போற்றும் விதமாக ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டி திதியில் கொண்டாடப்படுகிறது. ஐப்பசி அமாவாசைக்கு மறுதினம் பிரதமையில் விரதம் தொடங்கி ஆறு நாள்கள் அன்ன ஆகாரம் இன்றி விரதம் இருந்து முருகனை வணங்குகின்றனர்.

ஆறாம் நாள் சூரசம்ஹாரம் முடிந்து விரதம் முடிக்கும் பக்தர்கள் வெற்றிக்கு அடையாளமாக திருக்கல்யாணம் முடிந்து தங்கள் ஊர் திரும்புகின்றனர். காலம் காலமாகக் கொண்டாடப்படும் சூரசம்ஹாரத்தின் புராண கதையை நாம் பார்க்கலாம்

சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்த தோன்றிய அக்னியில் உருவானவர் ஆறுமுகப் பெருமான். சரவணப்பொய்கையில் இருந்த தாமரை மலர்களில் குழந்தைகளாக உருமாறி கார்த்திகைப் பெண்களின் கைபட்டு கந்தனாக வளர்ந்தார். அவரது அழகு அனைவரையும் கவர முருகன் ஆனார். முருகன் அவதாரமே சூரனை சம்ஹாரம் செய்வதற்காகத்தான் என்பதை உணர்த்துகிறது புராணம். சூரபத்மன் யார்? தேவர்களை எதிர்க்கும் அளவிற்கு தெம்பு எப்படி வந்தது? அவன் செய்த கொடுஞ்செயல்கள் என்ன சூரபத்மனை சுப்ரமணியர் எப்படி வதம் செய்து வெற்றி கொண்டார்

சூரபத்மனின் சகோதரர்கள் கஷ்யப முனிவருக்கும், மாயைக்கும் பிறந்த பிள்ளைகள், சூரபத்மன், சிங்கமுகன், தாரகன். சூரபத்மனுக்கு அசுரமுகம். தாரகனுக்கு யானைமுகம். சிங்கமுகனுக்கு சிங்கமுகம். இவர்கள், குல குருவான சுக்கிராச்சாரியாரிடம் உபதேசம் பெற்று, சிவனை நோக்கித் தவமிருந்தனர். தவப்பயனாக 1008 அண்டங்களையும் ஆட்சிசெய்யும் வரம் பெற்றனர். சூரியன், சந்திரன், அக்னிதேவன், குபேரன் முதலிய தேவர்கள் அனைவரும், அசுரர்களின் பணியாளர்களாக மாறினர்.

தேவர்கள் பிரம்மாவிடம் சென்று தங்கள் நிலையைச் சொல்லி வருந்தினர். சூரபத்மனை அழிக்க சிவனால் மட்டுமே முடியும். அதனால் அவரிடம் முறையிட்டால் விடுதலை கிடைக்கும் என்றார் பிரம்மா. தேவர்களும், கயிலாயம் சென்று சிவனிடம் முறையிட்டனர். அவருக்கு சத்யோஜாதம், வாமதேவம், தத்புரும், ஈசானம், அகோரம், அதோமுகம் ஆகிய ஆறு முகங்கள் உண்டு. அவற்றில் இருந்து. ஆறு நெருப்புப் பொறிகளை உண்டாக்கினார்.

அவை சரவணப்பொய்கையில் விழுந்து, குழந்தைகளாக மாறின. கார்த்திகை பெண்கள் வளர்க்க அவற்றை அன்னை பார்வதி ஒன்று சேர்த்த போது, கந்தன் ஆனார். அழகான அவர் முருகன் ஆனார்.

சூரபத்மனை போரிட்டு வென்று தேவர்களைக் காத்தார். ஐப்பசி மாதம் சஷ்டி திதியில் சூரசம்ஹாரம் நிகழ்ந்ததாக ஐதீகம். அதனால், கந்த சஷ்டியன்று முருகன்கோவில்களில்சூரசம்ஹாரம்நடைபெறுகிறது.



முருகப்பெருமானுக்கு அன்னை பார்வதி தன் சக்தி மிகுந்த வேலை கொடுக்க, சூரபத்மனுக்கு எதிரான போருக்கு புறப்பட்டார். தன் படை பாசறையை அமைத்தார். பார்வதி தேவியின் பாத சிலம்பில் இருந்து தோன்றிய நவசக்தியர்களிடம் இருந்து நவ வீரர்களான வீரபாகுதேவர், வீரகேசரி, வீர மகேந்திரர், வீர மகேசுவரர், வீர புரந்தரர், வீராக்கதர், வீர மார்த்தாண்டர், வீராந்தகர், வீர தீரர் மற்றும் லட்சம் வீரர்களும் தோன்றி முருகனின் படைத் தளபதிகளாக விளங்கினர். சூரபதுமனையும் அவனுடன் சேர்ந்த அசுரர்களையும் அழித்து தேவேந்திரனுக்கு பட்டாபிகேம் செய்து தர்மத்தை நிலைநாட்ட புறப்படுவாயாக என்று கந்தனுக்கு, சிவபெருமான் அன்பு கட்டளையிட்டார்.

சங்கு முழங்கியது. மலர் மாரி பொழிந்தது. தேவசேனாபதியின் பெரும் படை செல்லும் வழியில் கிரவுஞ்ச மலை எதிர்பட்டது. அம்மலைக்கு அதிபதியான சூரபத்மனின் தம்பியாகிய தாரகாசூரனை சம்ஹாரம் செய்து அவன் மார்பில் அணிந்திருந்த திருமாலின் சக்ராயுதமாகிய செம்பொன் பதக்கத்தை முருகன் பெற்றார்.



முருக பெருமானின் படைகள் ஆரவாரத்துடன் புறப்பட்டன. சூரபத்மன் மகன் பானுகோபன் புறப்பட்டு வந்து முருக பெருமான் படையோடு போரிட்டு படுதோல்வி அடைந்து புறமுதுகு காட்டி ஓடினான். 3ஆம் நாள் போரில் பானுகோபன் கொல்லப்பட்டான். அடுத்து சிங்கமுகாசூரன் சிங்கமென சீறிப் பாய்ந்து போர்க்களம் வந்தான். ஆனால் முருகபெருமானின் வேல், சிங்கமுகாசூரனை சம்ஹாரம் செய்து அவனும் கொல்லப்பட்டான். அடுத்து சூரபத்மனின் தலைமை அமைச்சர் தருமகோபன், சூரபத்மன் மக்கள் மூவாயிரம் பேரும் கொல்லப்பட்டனர்.

முடிவில் எஞ்சி நின்றது சூரபதுமன் மட்டுமே. சூரசம்ஹாரம் பெரும் படையுடன் சூரபத்மன் போருக்கு வந்தான். மிக அற்புதமாக மாயப் போர் புரிந்தான். முருகனது வேலில் இருந்து தப்பிக்க மிருகங்கள், பறவைகள், மரங்கள் என மாறி மாறி மாயத்தால் தப்பினான். முருகனின் சக்தி வேல் திருச்செந்தூர் அருகே உள்ள மரப்பாடு என்ற மாந்தோப்பில் மாமரமாக மறைந்திருந்த சூரபத்மனை இருகூறாக பிளந்து சம்ஹாரம் செய்தது. சூரபதுமன் ஆணவம், அகங்காரம் ஒழிந்தது. இரண்டும் சேவலாகவும், மயிலாகவும் மாறி முருகப்பெருமான் கொடியாகவும் வாகனமாகவும் மாறின.

சூரனை சம்ஹாரம் செய்த முருகனது வேல் கங்கைக்கு சென்று நீரில் மூழ்கி தோஷம் நீங்கி மீண்டும் முருகனது கைகளில் வந்தது. அதை கடற்கரை ஓரத்தில் பூமியில் குத்த, உள்ளே இருந்து நீர் பீறிட்டு வெளிவந்தது. அந்த நீர்தான் நாழிக் கிணறு நீரானது. அந்த நீரையும், மணலையும் சேர்த்து சிவலிங்கம் செய்து முருகன் சிவபூஜை செய்தார். விண்ணும் மண்ணும் குளிர்ந்தன.

தேவர்கள், முனிவர்கள் மலர் மாரி பொழிந்தனர். முருகன் தெய்வானை திருக் கல்யாணம் தேவாதி தேவர்கள் புடைசூழ திருப்பரங்குன்றம் என்ற தலத்துக்கு முருக பெருமான் வந்தார். குன்றத்தில் தவம் செய்து வந்த ஆறு முனிவர்களுக்கு திருவருள் புரிந்தார். ஆறு முனிவர்களும் முருக பெருமானை தேவ தச்சனால் நிர்மாணிக்கப்பட்ட பொன் வண்ண கோவிலினுள் எழுந்தருளச் செய்தனர்.

தேவேந்திரன் தன் மகளாகிய தெய்வானையை மணம் முடிக்க விரும்பினார். திருப்பரங்குன்றத்திலே மங்கள மண நாள் அன்று ஈரேழு பதினான்கு லோகங்களும் வியக்கும் வண்ணம் இந்திரனும் அவன் மனைவி இந்திராணியுடன் தெய்வானையின் கை பிடித்து முருகனிடம் ஒப்படைத்தனர். திருமணம் அதி அற்புதமாக நடந்தேறியது. சிவபெருமான் - பார்வதிதேவியை முருகன் - தெய்வானை மூன்று முறை சுற்றி வந்து வழிபட்டனர். பின் நால்வரும் திருமணத்துக்கு வந்த அனைவரையும் ஆசீர்வதித்தனர். *

## செந்திருவே கந்தவேளே சிறப்படையச் செய்திடப்பா!

விழிக்குத் துணையானாய் எங்கள்
மொழிக்கும் துணையானாய்
பழிக்குப் பகையானாய் நாளும்
வழிக்குத் துணையானாய்

அழிக்கும் பகையனைத்தும் நில்லா
நிலைக்குக் களனானாய்
இமைக்கும் விழியில் என்றும்
இருக்கும் கதிர்வேலா !

தந்தைக்குப்பாடமுரைத்தாய் அதனால்
தரணிக்கே குருவானாய்
சொந்தமுடன் கந்தனென்பார் வாழ்வை
சோதனைக்குள் சிக்கவைப்பாய்

உந்தனது சோதனையால் நாளும்
உழலுகின்ற பக்தர்தமை
செந்திருவே கந்தவேளே விரைவில்
சிறப்படையச் செய்திடப்பா!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் .. ஆஸ்திரேலியா

# கார்ட்போர்ட் வாக்குப்பெட்டிகளால் ஒன்பது கோடி ரூபா பணம் மிச்சம்!

## மஹிந்த தேசப்பிரிய தகவல்

கொழும்பு, நவ. 02

ஜனாதிபதித் தேர்தலுக்காகக் குறைந்த செலவில் 12,500 கார்ட்போட் வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என மரப்பெட்டிகளை தயாரிக்க 10 கோடி ரூபா செலவாவதை ஒரு கோடி ரூபாவில் செய்ய முடிந்ததாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மூன்று வகையான பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குறைந்த வாக்குகளைக் கொண்ட வாக்களிப்பு நிலையத்துக்குச் சிறிய பெட்டியும், மத்திய தரத்துக்குச் சாதாரண பெட்டியும், ஆகக்கூடிய வாக்குகளைக் கொண்ட வாக்களிப்பு நிலையத்துக்கு பெரிய பெட்டியும் பயன்படுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மொத்தம் 12,845 வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் ஒரு வாக்குப் பெட்டி வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெட்டிகளைப் பயன்படுத்தியுள்ளோம். மரப்பெட்டிகளை அமைக்க கூடுதலான பணம் செலவிட வேண்டியுள்ளதால் நாம் கார்ட்போட் பெட்டிகளைப் பயன்படுத்த திட்டமிட்டோம்.

மரப்பெட்டிகளைச் செய்வதாக இருந்தால் 10 கோடி ரூபா தேவைப்படுகின்றது. அதில் 9 கோடி ரூபாவை எம்மால் மீதப்படுத்த முடிந்துள்ளது. பெட்டிகள் பாதுகாப்பானதாக அமைக்கப்பட்டுள்ளன. பரிசீலித்த பின்னரே இதனைத் தெரிவு செய்தோம்.

இந்தப் பெட்டிகளால் எந்தத் தவறுகளும் ஏற்படப்போவதில்லை. வாக்குமோசடிகளுக்கும் இடமில்லை. வாக்குப் பெட்டிகள் கைமாறக்கூடிய வாய்ப்புகளும் கிடையாது. மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை.

தேர்தலன்று நேர காலத்துடன் வாக்களிப்பதன் மூலம் சிரமங்களை தவிர்க்க முடியும். ஏனெனில் ஒரு கோடியே 59 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கப் போதிய காலஅவகாசம் தேவையென்பதை உணர்ந்தே சில மாற்று நடவடிக்கைகளை இந்தத் தேர்தலில் கையாளத் தீர்மானித்துள்ளோம்.

எதைச் செய்தாலும் என்னைத் தூற்றுபவர்கள்




இருக்கவே செய்கின்றனர். நல்லது, கெட்டதைப் பார்க்க மாட்டார்கள். என்னைக் குறைகள் கொண்டே பார்க்கின்றனர். 40 வருடங்களுக்கும் மேலாக ஏச்சும் பேச்சும் கேட்டுப் பழக்கப்பட்டவன். எனது கடமையைச் சரிவரச் செய்வதில் நான் தவறமாட்டேன். தவறிழைப்பவர் யாராக இருப்பினும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கவும் மாட்டேன்.

தேர்தலின்போது சட்டம், ஒழுங்கைப் பேணுமாறு சகலரிடமும் கேட்டுக்கொள்கின்றேன். ஊடகங்கள் பக்கம் சாராது இயங்குவதை உறுதிப்படுத்தவேண்டும். பல தடவைகள் இதனை சுட்டிக்காட்டியுள்ளேன். சில விடயங்களில் சட்டத்தை என்னால் சரிவரச் செய்யமுடியாது. அதிகாரம் தரப்பட்டாலும் அது வேறுவழியில் என்னிடமிருந்து பறிக்கப்பட்டிருப்பதாகவே கருதுகின்றேன் – என்றார். (ஐ)

# சீன சுற்றுலாப் பயணி மீது பாலியல் துஷ்பிரயோகம்!

## மொட்டுக் கட்சிப் பிரமுகர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 02

பொதுஜன பெரமுனவின் தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மற்றும் அவரது சாரதியும் இணைந்து தன்னைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் எனச் சீனப் பெண் சுற்றுலாப் பயணி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் காலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். எனினும் பொலிஸார் அதற்கு ஒரு பதிலையும் வழங்கவில்லை எனவும், தான் முறைப்பாடு செய்த போதிலும், முன்னாள் உறுப்பினர் விசாரணைகளுக்கு அரசியல் அழுத்தம் பிரயோகிப்பதாகவும், வீடியோ ஒன்றின் ஊடாக அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சந்தேக நபரைக் கைது செய்வதற்கோ அல்லது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கோ பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரின் சகோதரரும் இன்னும் ஒரு தென் மாகாண சபையின் உறுப்பினர் ஒருவரும் தனக்கு அழுத்தம் பிரயோகித்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் வினவியபோது, சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார். (ஐ)

# சொல்வதைச் செய்வார் சஜித்!

## மல்வத்த பீடாதிபதி நம்பிக்கை



கொழும்பு, நவ. 02

பெரும்பாலான அரசியல் கட்சிகள், தலைவர்கள் தேர்தலுக்கு முன்னர் அளிக்கும் வாக்குறுதிகளைத் தேர்தலின் பின்னர் மறந்து விடுவது வழக்கம். ஆனால், சஜித் பிரேமதாஸ அப்படியானவர் அல்லர். அவரது கடந்த காலத்தின் அடிப்படையில் சொல்வதைச் செய்வார் என நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார் மல்வத்த பீட மகாநாயக்கர் திப்பட்டுவவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர்.

புதிய ஜனநாயகக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை மகாநாயக்கரிடம் கையளித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் தேர்தல் அறிக்கைகளில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இலங்கை இன்று பூமியில் சொர்க்கமாக இருந்திருக்கும். கடந்த கால அனுபவம் என்னவென்றால், அரசியல்வாதிகள் பெரும்பாலும் ஆட்சிக்கு வந்த பின்னர் தங்கள் விஞ்ஞாபனங்களைக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பிவிடுவார்கள்.

சஜித் பிரேமதாஸ நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் செயற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், அவர் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் – என்றார். (ஐ)

# பொலிஸ் அதிகாரிகள் இருவர் தேர்தல் பிரசாரம் செய்தனரா?

## மறுக்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, நவ. 02

யாழ்ப்பாணத்தில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இரு பொலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டனர் எனச் சில இணைய ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர,

யாழ். கோட்டைப் பிரதேசத்தில் கடந்த 28 ஆம் திகதி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அந்தப் பிரதேசத்துக்கான வீதி பாதுகாப்பு, உயர்ந்த கட்டடப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் என் பவற்றுக்காக இரு பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சர் டீ.டி.ஆர்.தசநாயக்க மற்றும் யாழ் பொலிஸ் தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் பிராந் பெர்னான்டோ ஆகியோரே இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பிரசாரக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அந்த வேட்பாளர் இந்த பொலிஸ் அதிகாரிகளிடம் பேசிக் கொண்டிருந்தபோது அதனை கூட்டத்தில் கலந்து கொள்ளவதற்காக வருகை தந்திருந்த நபர் புகைப்படம் எடுத்து பொலிஸ் அதிகாரிகள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று பொய்யான செய்தியை பரப்பியிருக்கிறார்.


கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் இவ்வாறு பரப்பப்பட்ட செய்தி உண்மைக்கு புறம்பானது என்பதை பொலிஸ் தலைமையகம் உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்தார். (ஐ)

# கொங்கிரீட் பதுங்குகுழி ஒன்று கிளிநொச்சியில் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, நவ. 02

கிளிநொச்சி, ஜெயந்திநகர்ப் பகுதியில் தனியார் காணியொன்றில் கொங்கிரீட் இடப்பட்ட பதுங்குகுழி போன்ற கட்டமைப்பொன்று புதிதாகக் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை அந்தக் காணியில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் இவ்வாறு கொங்கிரீட்டினாலான பதுங்குகுழி ஒன்றைக் கண்டுள்ளனர்.



அதனைத் தொடர்ந்து துப்பரவுப் பணியில் ஈடுபட்டவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இந்தத் கதவலுக்கமைய அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், பதுங்குகுழி குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# சந்திரனில் 4 விஞ்ஞானிகளை ஒரு வார காலம் தங்க வைத்து ஆராய்ச்சி நடத்த நாஸா திட்டம்



வொஷிங்டன்,நவ.02

2024ஆம் ஆண்டில் மீண்டும் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பி ஆராய்ச்சி மேற் கொள்ள அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிமைய மான 'நாஸா' முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக புதன் கிழமை நடந்த அதன் ஆண்டுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

அப் போது நிலவு ஆராய்ச்சி பகுப்பாய்வுக் குழுவை சேர்ந்த ஜோன் கொனொல்லி மற்றும் நிகிவொர்கீசர் ஆகியோர் பேசும்போது, 2024ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தின் படி 2 வீரர்கள், ஆறரை நாள்கள் நிலவில் தங்கி ஆராய்ச்சி மேற்கொள்ள உள்ளனர் எனத் தெரிவித்தனர்.

மேலும் விண்வெளி வீரர்கள் சந்திரனின் மேற்பரப்பில் இருக்கும்போது நான்கு விண் வெளிப் பயணப் பாதைகளை நடத்தக்கூடும் என்றும் கூறினார்.

நிலவில் தண்ணீர் தொடர்பாகவும், இதர அறி வியல் ஆராய்ச்சிகளையும் அந்த வீரர்கள் மேற் கொள்வர் எனக் குழுவினர் கூறியுள்ளனர்.

2030ஆம் ஆண்டுக்குள் 4 வீரர்களை நிலவுக்கு அனுப்பி 14 நாள்கள் வரை அவர்களை நிலவில் தங்க வைத்து ஆராய்ச்சி மேற்கொள்ள திட்டமிட்டி ருப்பதாகவும் அந்தக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

## அமெரிக்காவில் இருந்து 'ஸோஸ்' போத்தல்களில் ஆஸிக்குள் கடத்தி வரப்பட்ட போதைப்பொருள்!

### 3,700 கோடி ரூபா பெறுமதி வாய்ந்தவையாம்

சிட்னி,நவ.02

அமெரிக்காவில் இருந்து ஆஸ்திரேலி யாவுக்குள் போத்தல்களில் கடத்திய போதைப்பொருள்கள் சிக்கின. அவற்றின்



பெறுமதி இலங்கைப் பணத்தில் சுமார் மூவாயிரத்து எழு நூறு கோடி ரூபா என்று கூறப்படுகின்றது.

உணவுப்பொருட்களுடன் சேர்த்து சாப்பிடக்கூடியது 'ஸோஸ்'. இந்த 'ஸோஸ்' நிரப்பப்பட்ட 768 போத்தல்களில் 400 கிலோ எடைகொண்ட படிக நிலையிலான 'மெத்தம்பேட்டமைன்' என்ற போதைப் பொருள் கலந்து ஆஸ்திரேலியாவுக்குள் கடத்தப்பட்டுள்ளது.

'ஸோஸ்' பாட்டி போத்தல்களில் ஸோஸுடன் கலந்து இருந்த போதைப்பொருள் களைத் தனியாகப் பிரித்தெடுப்பதற்காக சிட்னி நகரில் உள்ள ஓர் ஆய்வகத்துக் குவை எடுத்துச்செல்லப்பட்டபோது பொலிஸார் அதனைக் கண்டுபிடித் துக் கைப்பற்றினர்.

அமெரிக்க நாட்டில் இருந்து ஆஸ் திரேலிய நாட்டுக்குள் கடத்தப்பட்ட இந்த போதைப்பொருளின் மதிப்பு 207 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூ.3,700கோடி) ஆகும்.

இந்தப் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக 4 பேர் கைது செய்யப் பட்டனர். இந்த 4 பேரும்தான் போதைப்பொருள் கடத்தலில் முக்கிய பங்கு வகித்தவர்கள் என ஆஸ்திரேலிய அரசு உயர் அதிகாரி ஸ்டுவர்ட் ஸ்மித் தெரிவித்தார்.

இந்தப் போதைப்பொருள்கள் அமெ ரிக்காவில் எங்கிருந்து கடத்தி வரப்பட்டன, இவற்றை அனுப்பி வைத்தவர்கள் யார் என்பதை உறுதி செய்ய அமெரிக்க பொலிஸாருடன் ஆஸ்திரேலிய பொலி ஸார் தொடர்பு கொண்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

## வடகொரியா அதிரடியாக மீள ஏவுகணைச் சோதனை

சியோல்,நவ.02

மீண்டும் இரண்டு ஏவுகணைகளை சோதித்து வடகொரியா மேற்கொண்ட அதி ரடிசோதனைநடவடிக்கைதென்கொரியாவை அதிரவைத்துள்ளதுஎன்றுகூறப்படுகின்றது.

வட கொரியா அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது. இது தொடர் பாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வட கொரியா தலைவர் கிம் ஜாங் அன்னும் சிங்கப்பூரிலும், வியட்நாமிலும் உச்சி மாநாடு நடத்தி சந்தித்து பேசினர்.

முதல் மாநாடு வெற்றி பெற்றாலும், வியட்நாம் மாநாடு பாதியிலேயே முடிந்தது. அதைத் தொடர்ந்து, கடந்த ஜூன் மாதம் இரு தலைவர்களும் கொரிய எல்லையில் சந்தித்து பேசினர். ஆனால் வடகொரியா மீது விதித்துள்ள பொருளாதார தடைகளை கொஞ்சம் கூட விலக்க முடியாது என்று அமெரிக்கா அடம் பிடித்து வருகிறது.

கொஞ்சமாவது அமெரிக்கா விலக்கி னால்தான் அணு ஆயுதங்களை முழு மையாக கைவிடுவது பற்றி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பதில் வட கொரியா தெளிவாக இருக்கிறது.

இந்த நிலையில், மறுபடியும் குறுகிய தொலைவுக்குப் பறந்து சென்று தாக்குதல்



நடத்த ஏற்ற ஏவுகணைகளை வடகொரியா சோதித்து வருகிறது. அந்த வகையில் நேற்று அடுத்தடுத்து 2 ஏவுகணைகளை ஏவி, அந்த நாடு சோதித்தது.

இந்த ஏவுகணைகள், ஜப்பான் கடல் என்று அறியப்படுகிற கிழக்கு கடலில் போய் விழுந்தன. அவை தெற்கு பியாங் கான் மாகாணத்தில் இருந்து ஏவப்பட்டன எனத் தென் கொரியா கூறுகிறது.

வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனைகள், தென்கொரியாவை அதிர வைத்துள்ளது. சுவீடனில் அமெரிக்கா மற்றும்வடகொரியாஅதிகாரிகள், ஒக்டோபர் மாதத் தொடக்கத்தில் அணு ஆயுதம் கைவிடல் தொடர்பாக நடத்திய பேச்சில் எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், இந்த ஏவுகணை சோதனைகளை வடகொரியா நடத்தி இருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

## ஐந்நூறு ஆண்டுகள் பழமையான ஜப்பான் கோட்டை தீயில் நாசம்



டோக்கியோ,நவ.02

ஜப்பானில், ஒக்கினவா தீவில் சுமார்ஐந்நூறுஆண்டுகள்பழமை யான ஷுரி என்ற கோட்டையின் ஏழு முக்கிய கட்டடங்கள் எரிந்து சாம்பலாகின.

ஜப்பானில், ஒக்கினவா தீவில் 500 ஆண்டுகள் பழமையான ஷுரி என்ற கோட்டை இருந்தது. இந்தக் கோட்டை முற்றிலும் மரப் பலகைகளால் கட்டமைக்கப்பட்டது. இந்த கோட்டை இரண்டாவது உலகப்போரின்போது முற்றிலும் அழிக்கப்பட்டது. ஆனால் மறு படியும் கட்டமைக்கப்பட்டு விட்டது. அதைத்தொடர்ந்து ஷுரி கோட்டை, யுனஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னமாக திகழ்ந்து வந்தது.

இந்தக் கோட்டையில் நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.40 மணிக்கு திடீரென தீப்பிடித்தது.

இந்த தீ மின்னல் வேகத்தில் கோட்டை முழுவதும் பரவத்தொடங் கியது. தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து 10 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் இந்த கோட்டையின் 7 முக்கிய கட்டடங்கள் எரிந்து சாம்பலாகி விட்டன. இதனால் அந்தக்கோட்டையே உருக்கு லைந்து போனது.

இது ஜப்பான் மக்கள் மத்தி யில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி டோயகோ மியாஜட்டோ என்ற 84 வயது முதி யவர் கருத்து தெரிவித்தபோது, இந்த கோட்டை எங்களுக்கு கடவுளைப்போல. இப்போது அது தீக்கு இரையாகி விட்டது மிகுந்த வேதனை அளிக்கிறது என்று கூறினார்.

## பக்தாதி கொல்லப்பட்ட சம்பவம்; வீடியோவை வெளியிட்டது அமெ.



வொஷிங்டன்,நவ.02

ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் தலைவன் பாக்தாதி மீதான தாக்குதல் தொடர்பான வீடி யோவை முதல்முறையாக அமெரிக்க இராணு வத் தலைமையகமான பென்டகன் வெளியிட் டுள்ளது.

அமெரிக்காவையே அலற வைத்தவர் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபுபக்ர் அல் பாக்தாதி (வயது 48). அதனால்தான் அவரைக் கொல்ல வேண்டும் அல்லது உயிரோடு பிடிக்க வேண்டும் என்று அமெரிக்கா குறி வைத்தது.

அவர் சிரியாவில் இத்லிப் நகருக்கு அருகே பாரிஸ் என்ற கிராமத்தில் ஒரு வளாகத்தில் பதுங்கி இருக்கின்றமையை துப்பு அறிந்து கடந்த 26 ஆம் திகதி அமெரிக்க சிறப்புப் படை சுற்றி வளைத்தது.

தப்பிக்க ஒரு வழியும் இல்லை என்ற நிலை யில் தன் உடலில் கட்டி வைத்திருந்த குண்டுகளை வெடிக்க வைத்து பாக்தாதி பலியானார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான வீடியோவை முதல்முறையாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகன் வெளியிட்டுள்ளது. பாக்தாதி பதுங்கி இருந்த வளாகத்தில் இருந்த தீவிரவாதிகளை நோக்கி அமெரிக்க படை வீரர்கள் துப்பாக்கியால் சுடும் காட்சி வீடியோ வில் உள்ளது. அமெரிக்கப் படையின் தாக்குதலால் நிலை குலைந்து போன பாக்தாதி, அந்த வளாகத்தில் உள்ள குகைப்பாதைக்குள் ஓட, அமெரிக்க படையில் இடம் பெற்றுள்ள நாய் துரத்த, அதன்பின்னர்தான் பாக்தாதி தனக்கு தானே முடிவைத் தேடி கொண்டார்.

அமெரிக்க படை நடத்திய தாக்குதல்களை தொடர்ந்து அந்த வளாகம் பெரிய பள்ளங்களுடன் வாகனங்கள் நிறுத்துமிடம் போல காட்சி அளிப்பதையும் வீடியோ காட்டுகிறது. இதுபற்றி அமெரிக்க மத்திய இராணுவ தளபதி ஜெனரல் கென்னத் மெக்கென்சி நிருபர்களிடம் பேசு கையில், பாக்தாதியுடன் குகையில் 3 குழந்தை கள் பலியாகினர் வந்த தகவல் சரியானதல்ல, 2 குழந்தைகள் பலியாகி இருக்கின்றன எனக் கூறினார்.

அந்த வளாகத்தில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருந்த 'பெல்ட்' அணிந்திருந்த 4 பெண்கள், ஓர் ஆண் ஆகியோரும் பலியாகினர் என்றார்.

பாக்தாதி உயிர்ப்பலியால், ஐ.எஸ். அமைப்பு பழிவாங்கும் வகையில் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# போட்டியிலிருந்து விலகுமாறு ரெலோ எனக்குக் கடிதம் அனுப்பவேயில்லை!

## ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜி சொல்கிறார்



வவுனியா, நவ. 02

போட்டியில் இருந்து விலகாவிட்டால் என் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ரெலோ தெரிவித்துள்ளது என ஊடகங்கள் வாயிலாகத்தான் நான் அறிந்துள்ளேன். எந்தவித கடிதங்களும் எனக்கு வரவில்லை. கடிதம் கிடைத்தால் கிடைத்தவுடன் என் விளக்கத்தை அவர்களுக்கு அனுப்பி வைப்பேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி வேட்பாளருடான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா வாடி வீட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் பிரசாரங்கள் தென்னிலங்கையில் மாத்திரமின்றி வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலும் தற்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன. 7 ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. இது எட்டாவது தேர்தல். சிங்களக் கட்சிகளை நம்பி பிரயோசனம் இல்லை. ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் எனத் தமிழ் மக்கள் பேரவை, சுயாதீன அமைப்புக் குழு, திருகோணமலை மாவட்ட வணக்கத்திற்குரிய ஆயர், தென்கைலை ஆதீனம், யாழ்ப்பாணம் சின்மியா மிசன் சுவாமியார் உட்பட பலர் பல்வேறு தமிழ்த் தலைவர்களைச் சந்தித்தார்கள். இதன்போது பொது வேட்பாளர் குறித்து பேசப்பட்டபோது இந்தக் கட்சித் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட தலைவர்கள் எவருமே இவ்வாறு போட்டியிட்டால் வாக்குகள் பிளவுபடும் என்ற கருத்தைக் கூறவில்லை. அவர்களால் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாத நிலைமை ஏற்பட்ட பொழுது தான் திருமதி அனந்தி சசிதரனைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிட வைக்கப் பேசியிருந்தேன். கனடாவில் இருந்து வழக்கறிஞர் கரிகாலன் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவுடன் பேசியிருந்தார். எவையும் சரிவராத நிலையில் தான் நான் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்தி பல சுற்றுப் பேச்சுக்களை நடத்துவதற்குப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னின்று செயற்பட்டுள்ளார்கள். ஆறு கட்சிகள் கூடிய நிலையில் இடைக்கால அறிக்கையை நாங்கள் நிராகின்றோம் என்ற வசனம் குறிக்கப்படாமை காரணமாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியேறியிருந்தது. ஏனைய 5 கட்சிகளும் கையெழுத்திட்டு 13 அம்சக் கோரிக்கைளை முன் வைத்திருந்தன. பிரதான வேட்பாளர் மூவருக்கும் அனுப்பப்பட்டது. அந்தக் கோரிக்கைகளை ஊடகங்கள் வாயிலாக பார்த்து அதனை முற்று முழுதாக ஏற்றுக் கொள்கின்றேன். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் 5 தமிழ்க் கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தால் நான் போட்டியில் இருந்து விலகத் தயார் என்றும் கூறியிருந்தேன். இதைவிட இரண்டு கோரிக்கைகளை ஒருவராவது ஏற்றுக் கொண்டால் விலகுவதாகத் தெரிவித்திருந்தேன்.

அரசமைப்பில் 13 வது திருத்தம் உட்பட அதனை முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும். புதிய அரசமைப்பு வருகின்றபோது ஒற்றையாட்சி, பௌத்தம் என்ற முன்னுரிமை இல்லாமல் அரச தரப்பு பேச வேண்டும். அதுபோல் எங்கள் தரப்பும் பேச வேண்டும். அதற்கும் எவரும் பதிலளிக்கவில்லை. ஆகையால் இனிப் போட்டியில் இருந்து விலக வேண்டிய நிலை ஏற்படும் எனக் கருதவில்லை. புதிய ஜனநாயக முன்னனியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழர் விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. கோட்டபாயவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் எவையும் இல்லை. அனுரகுமார திசாநாயக்காவும் தமிழர் பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் கூறத் தவறிவிட்டார். அதனால் தான் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்குமாறு நாங்கள் கைகாட்ட முடியாது, நீங்கள் விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கலாம் என 5 கட்சிகளும் தெரிவித்துள்ளன. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரனும் அவ்வாறு கூறியிருக்கிறார்.

கோட்டபாய அல்லது சஜித் தான் ஜனாதிபதியாக வரப் போகின்றனர். இந்த நிலையில் தான் நாங்கள் சர்வதேசத்துக்கும், தென்னிலங்கைக்கும் தெளிவான செய்தியைச் சொல்ல வேண்டும். எங்கள் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் நாங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்குச் சென்று போர்க்குற்றங்களுக்கும், இனப் படுகொலைக்கும் நீதி கோருவோம். புதிய ஜனாதிபதி 3 மாத காலத்திற்குள் புதிய அரசமைப்பைக் கொண்டு வராத நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மூலம் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொதுசன வாக்கெடுப்பைக் கோருவோம். இவற்றை உள்ளடக்கியதாக என் தேர்தல் பிரகடனம் வெளியிடப்படும். பெரும்பாலும் எதிர்வரும் 9 ஆம் திகதி திருகோணமலையில் மிகப்பெரிய மக்கள் கூட்டத்துடன் அதனை வெளியிடுவேன்.

எனவே 16 ஆம் திகதி வாக்குகளை அளிக்கும் போது கவனம் செலுத்தவும். நான் ஒரு அடையாளம் மாத்திரம் தான். இந்த வாக்குகளுக்கு நான் தனித்து உரிமை கோரமாட்டேன். எனக்கு ஒரு லட்சம் வாக்குகளை அளிக்கும் பட்சத்தில் சர்வதேசம் திரும்பி பார்க்கும். நான் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்தவுடனேயே பல வெளிநாட்டு தூதரங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள். எங்களுக்கு இவர், அவர் வெல்ல வேண்டும் என்றல்ல. பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். மத்தியஸ்தம் வகித்து பெற்றுத்தாருங்கள் போட்டியில் இருந்து விலகுகிறேன் எனக் வெளிநாட்டு துர்துவராலயங்களுக்கு கூறியுள்ளேன். எனவே மக்கள் எங்களுக்கு பேராதரவு தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் போட்டியில் இருந்து விலகாவிட்டால் என்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ரெலோ தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் வாயிலாகத்தான் நான் அறிந்துள்ளேன். எந்த விதகடிதங்களும் எனக்கு வரவில்லை. 3 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நான் போட்டியில் இருந்து விலகவேண்டும் என்று கேட்டுள்ளார்கள். இதற்கு முன்னர் கடந்த 13 ஆம் திகதி அவர்களது தலைமைக் குழு கூடி ஒருவார கால அவகாசம் விதித்திருந்தது. மீண்டும் 26 ஆம் திகதி கூடி 3 ஆம் திகதி வரை நீடித்திருக்கிறார்கள். என்னுடைய தன்னிலை விளக்கத்தை நவம்பர் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்குமாறு கேட்டுள்ளார்கள். எனக்கு இன்னும் கடிதம் கிடைக்கவில்லை. கிடைத்தால் என்னுடைய விளக்கத்தை அவர்களுக்கு அனுப்பி வைப்பேன். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 3 ஆம் திகதி விலகக் கூடிய நிலைமையில் நான் இல்லை. அவர்கள் விரும்பிய நடவடிக்கை எடுக்கலாம். கட்சிக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. நான் என்னுடைய மக்களுக்காகதான் போட்டியிடுகின்றேன். அவர்கள் என்னை நீக்கினால் பொது வேட்பாளர் என்ற பலம் அதிகரிக்கும் என்று தான் நினைக்கிறேன் – என்றார். (ஐ – 100)

# மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்பட்ட விவகாரம்; மாகாண சுகாதார அமைச்சிடம் விளக்கம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 02

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் வளாகமான சுகாதாரக் கிராமத்தில் பெரும் குழி அமைக்கப்பட்டு அதனுள் ஆபத்தான மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்பட்டமை தொடர்பான முறைப்பாட்டை விசாரித்து விளக்கமளிக்குமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் வளாகத்தில் இரகசியமான முறையில் சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் எனத் தெரிந்துகொண்டே மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்பட்டன என்று அந்தப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். தாம் வாழ்வதற்கான பாதுகாப்பை வழங்கக் கோரி மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் நேரில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது, சுகாதாரக் கிராமத்தில் அமைக்கப்பட்ட குழியினுள் பல ஆயிரம் மருத்து டப்பாக்கள் திறக்கப்படாமல் அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டன.

இது தொடர்பில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஊடாக பிராந்திய மருத்துவ அதிகாரி பணிமனைக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவம் குறித்து சுற்றுச்சூழல் பொலிஸாரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையிலேயே இந்த விடயம் தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சு உடன் விளக்கமளிக்குமாறு பிரதம செயலாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதி, வடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ – 07)

# தீவிரவாதிகளுடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்பமுடியாது

## மஹிந்த ராஜபக்ஷ காட்டமான கருத்து



கொழும்பு, நவ. 02

தீவிரவாதிகளுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மக்கள் இன்று வறுமை மற்றும் ஏழ்மையில் சிக்கித் தவிக்கின்றனர். சிறந்த வேலைத் திட்டங்கள், சிறந்த நோக்கம், சிறந்த இலக்கு, வேலை செய்ய முடியும் என நிரூபித்த ஒருவராலேயே அது சாத்தியமாகும்.

அனைவரின் சம்மதத்துடனேயே கோட்டாபய ராஜபக்ஷவை நாம் ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தோம்.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க நாம் யோசித்தோம். அதற்காகவே நாம் அவரை வேட்பாளராக நியமித்தோம்.

பிரிவினைவாத தீவிரவாதிகளுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இது தொடர்பாக நன்கு அறிந்த ஒருவராலேயே இதனைச் செயற்படுத்த முடியும்.

கோட்டாபய தவிர்ந்த வேறு எவருக்கும் அதனைச் செய்ய முடியாது – என்றார். (ஐ)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தங்கம் கடத்திய 14 பேர் கைது!

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தங்கம் கடத்த முற்பட்ட 14 பேர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் சென்னையில் இருந்து வந்த ஏ.ஐ. 273 என்ற விமானத்திலேயே இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 30 முதல் 50 வயதுடைய கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது



செய்யப்பட்டுள்ளனர் எனச் சுங்கப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 4 கிலோ 700 கிராம் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

## வடமாகாண
# மரநடுகை மாதம்
## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**




## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
**TAMIL NATIONAL GREEN ORGANIZATION**










# அனிதாவின் சாதனையை முறியடித்தார் டக்சிதா!

அகில இலங்கைப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டிகளின் இரண்டாம் நாளான நேற்று முன் தினம் சாவகச்சேரி இந்து கல்லூரியைச் சேர்ந்த என். டக்சிதா பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அத்துடன் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ்ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் புதிய சாதனையை படைத்தார்.



35ஆவது அகில இலங்கைப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன. போட்டியின் முதலாம் நாளான நேற்று முன்தினம் ஏ. புவிதரன் புதிய சாதனை நிலைநாட்டிய நிலையில் அவரது கல்லூரியைச் சேர்ந்தடக் சிதா, நேற்று முன்தினம் இரண்டாவது நாளன்று மற்றொரு சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.35 மீற்றர் உயரத்தைத் தாவியதன் மூலம் டக்சிதா புதிய சாதனையை நிலைநாட்டினார்.

மகாஜனா கல்லூரி சார்பாக 2014இல் போட்டியிட்டு 3.32 மீற்றர் உயரம் தாவி ஜே.அனித்தா ஏற்படுத்திய சாதனையையே டக்சிதா முறியடித்து புதிய சாதனைக்குச் சொந்தக்காரரானார். இந்தப் போட்டியில் டக்சிதாவின் சக மாணவியான வி. சோபிகா 3.10 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் 15.95 மீற்றர் தூரத்தை பதிவு செய்து புதிய சாதனையை நிலைநாட்டினார் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த எஸ். மிதுன்ராஜ். இந்த இரண்டு சாதனைகளுடன் மேலும் 9 புதிய போட்டிச் சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

இது இவ்வாறிருக்க 18 வயதின்கீழ் நீளம் பாய்தலில் கொண்டச்சி முஸ்லிம் கலவன் பாடசாலையைச் சேர்ந்த கே.பி. ஜெனுன் (6.99 மீ.) வெள்ளிப் பதக்கத்தையும் 20 வயதின்கீழ் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் வத்தளை லைசியம் கல்லூரியைச் சேர்ந்த எல்ரோய் கமல் ராஜ் (7.19 மீ.) வெள்ளிப் பதக்கத்தையும் 14 வயதின் கீழ் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாவெனல்லை ஸாஹிராவின் எம். ராக்கீஷ் (12.05 செக்.) வெள்ளிப் பதக்கத்தையும் ஏசியன் இன்டர்நெ–னலின் அத்தீப் மொஹைதீன் (12.19 செக்.) வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர்.

# மக்ஸ்வெலுக்கு மனநல பிரச்சினை

அதிரடி வீரர் கிளென் மக்ஸ்வெல் ஆஸ்திரேலியாவின் ரி – 20 சர்வதேச அணியில் இருந்து விலகியுள்ளார் என ஆஸ்திரேலியா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

அவர் மனநலப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளமையால் கிரிக்கெட்டில் இருந்து ஒரு குறுகிய ஓய்வு எடுப்பார் என ஆஸ்திரேலியக் கிரிக்கெட் குறிப்பிட்டுள்ளது.

கிரிக்கெட்டில் இருந்து குறுகிய ஓய்வு பெறுவதற்கான மக்ஸ்வெலின் முடிவை ஆஸ்திரேலிய கிரிக்கெட் நேற்று அறிவித்தது

நேற்று வெள்ளிக்கிழமை மெல்போர்னில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான மூன்றாவது ரி – 20 போட்டியில், மக்ஸ்வெலுக்கு பதிலாக டி அர்சி ரோட் ஆஸ்திரேலியா அணியில் இணைக்கப்பட்டார். ஆஸ்திரேலிய கிரிக்கெட்டின் உளவியலாளர் டாக்டர் மைக்கல் லொயாட் கூறியவை வருமாறு: –

மக்ஸ்வெல் தனது மனநலம் குறித்து சில சிக்கல்களைச் சந்தித்து வருகிறார். இதன் விளைவாக அவர் விளையாட்டிலிருந்து சிறிது காலம் ஓய்வெடுப்பார் – என கூறினார்.

எங்கள் வீரர்கள் மற்றும் ஊழியர்களின் நல்வாழ்வு மிக முக்கியமானது. மக்ஸ்வெலுக்கு எங்கள் முழு ஆதரவு உள்ளது என ஆஸ்திரேலிய கிரிக்கெட்டின் தேசிய அணிகளின் நிர்வாகப் பொது மேலாளர் பென் ஆலிவர் கூறினார்.

அவரின் நல்வாழ்வையும், விளையாட்டில் அவர் மீண்டும் ஒன்றிணைவதையும் உறுதி செய்ய ஆஸ்திரேலியா கிரிக்கெட் ஊழியர்களுடன் ஒத்துழைக்கும்.

எல்லோரும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் இடம்கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இந்த நேரத்தில் அவர்களின் தனியுரிமையை மதிக்கவேண்டும்.

அவர் ஒரு சிறந்த வீரர் மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் குடும்பத்தின் ஒரு முக்கிய அங்கம். கோடையில் அவரை மீண்டும் அணியில் காணலாம் என்று நாங்கள் நம்புகிறோம். மக்ஸ்வெல் உட்பட எங்கள் அனைத்து வீரர்களையும் நாங்கள் கவனிப்பது முக்கியம் என பென் ஆலிவர் கூறினார். (ஐ)




# கிப் அல் ஹசனின் இழப்பு எமக்கு உத்வேகம் அளிக்கும்

பங்களாதேஷின் முன்னணி வீரர் கிப் அல் ஹசனுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை இரண்டு ஆண்டுகள் தடை விதித்துள்ளமையானது, எங்களுக்கு கூடுதல் உத்வேகத்தை கொடுக்கும் என அணியின் புதிய ரி – 20 தலைவர் மொஹமதுல்லா தெரிவித்துள்ளார்.

அடுத்த மாத தொடக்கத்தில் இந்தியா செல்லும் பங்களாதேஷ் அணி அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடர் மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதில் அணியின் தலைவராக கிப் அல் ஹசன் நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது, ஐ.சி.சியின் இரண்டு ஆண்டுகள் தடை காரணமாக பங்களாதேஷ் ரி – 20 கிரிக்கெட் அணிக்கு மெஹ்முதுல்லாவும், டெஸ்ட் அணிக்கு மொமினுல் ஹக்யூவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் புதிதாக ரி – 20 அணியின் பொறுப்பை ஏற்றுள்ள மொஹமதுல்லா இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், கிப் அல் ஹசன் இல்லாதது எங்களை மேலும் உழைக்க உத்வேகத்தை உருவாக்கும். நாட்டுக்காக விளையாடுவதை விட மிகப் பெரிய கௌரவம் ஏதும் இருக்க முடியாது.

அணியை நடத்தும் பொறுப்பு எனக்குள்ளது. அதனால் என்னுடைய ஒட்டுமொத்த திறமையையும் அணிக்காக வெளிப்படுத்த முயற்சி செய்வேன் என கூறினார்.

இதற்கிடையில், கிப் அல் ஹசனுக்கு விதிக்கப்பட்ட தடையை முன்னாள் வீரர்கள் பலரும் வரவேற்றுள்ள நிலையில், இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் மைக்கேல் வோகன் இத்தடை குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.




அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், ‘கிப் அல் ஹசன் மீது எனக்கு எந்தவித அனுதாபமும் இல்லை. இந்த காலகட்டத்தில் வீரர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது குறித்து எல்லா நேரங்களிலும் எடுத்து சொல்லப்படுகிறது. ஏதாவது நடந்தால் அது குறித்து உடனடியாக புகார் தெரிவிக்க வேண்டும் என்பதும் வீரர்களுக்கு தெரியும்.

அப்படி இருக்கையில் தன்னை சூதாட்டத்தரகர் அணுகிய தகவலை தெரிவிக்காத கிப் அல் ஹசனுக்கு 2 ஆண்டு தடை விதித்தது போதாது.

இன்னும் கடுமையாக நீண்ட காலத் தண்டனை வழங்கப்பட்டிருக்க வேண்டும். யார் என்ன சொன்னாலும், ஊழலை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். விதியைப் பின்பற்றாவிட்டால் விளைவுகளைச் சந்திக்கத்தான் வேண்டும்’ என பதிவிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஊழல் தடுப்பு விதிமுறையின் மூன்று வகையான குற்றச்சாட்டில் பங்களாதேஷின் முன்னணி வீரர் கிப் அல் ஹசனுக்கு ஒரு வருட ஒத்திவைக்கப்பட்ட தடை உட்பட இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2018இல் இடம்பெற்ற பங்களாதேஷ், இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் போது சூதாட்டக்காரர்கள் கிப் அல் ஹசனை நாடியுள்ளனர். அதே போல் ஐ.பி.எல். தொடரில் விளையாடும் போதும் நாடியுள்ளனர்.

இது குறித்த விடயம் ஐ.சி.சியின் ஊழல் தடுப்புப் பிரிவிற்கு தெரிய வந்தது. இதனால் அவர்கள் விசாரணை மேற்கொண்டனர். அப்போது கிப் அல் ஹசன் தனது மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார்.

இதனால் சர்வதேசப் போட்டிகளில் இருந்தான ஓராண்டு ஒத்திவைக்கப்பட்ட தடை உடன் இரண்டு ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட ஐ.சி.சி. கிப் அல் ஹசனுக்கு தடை விதித்துள்ளது.

மேலும், கிப் அல் ஹசன் தடைக் காலத்தின் ஒரு பகுதியில் தடை நிலைமைகளை ஒத்துக் கொண்டால், மீண்டும் சர்வதேசப் போட்டியில் விளையாடுவதற்காக அடுத்த ஆண்டு ஒக்ரோபர் 29ஆம் திகதியில் இருந்து அனுமதிக்கப்படுவார் என்று தெரிவித்துள்ளது.

ஒருநாள் சர்வதேசப் போட்டியின் சகலதுறை வீரர்கள் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் 32 வயதான கீப் அல் ஹசன் 338 சர்வதேச போட்டிகளில் இதுவரை விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அபார வெற்றி!

நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது ரி - 20 போட்டியில், இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், ஐந்து போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் இங்கிலாந்து அணி 1 - 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

கிறிஸ்சர்ச் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர் மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 6 ஓட்டங்கள் பெற்றிருந்தவேளை தனது முதல் விக்கெட்டை இழந்தது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மார் டின் கப்டில் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்துக் களம்புகுந்த டிம் செய்பார்ட், மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான கொலின் முன்ரோவுடன் ஜோடி சேர்ந்து 33 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துக் கொண்டார்.

இதன்போது கொலின் முன்ரோவும் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து



களமிறங்கிய கொலின் டி கிராண்ட்ஹோமி 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினார்.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ரோஸ் டெய்லர் களத்தில் தாக்குப் பிடிக்க, மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய டிம் செய்பார்ட், 32 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்து வெளியேறினார்.

அடுத்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ரோஸ் டெய்லர், 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, டார்ல் மிட்செல் 30 ஓட்டங்களுடனும், மிட்செல் சான்ட்னர் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், கிறிஸ் ஜோர்தான் 2 விக்கெட்டுகளையும், சேம் கர்ரன், அடில் ராஷித் மற்றும் பெட்ரிக் பிரவுண் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 154 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 18.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது இங்கிலாந்து அணி சார்பில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான டாவிட் மாலன் 11 ஓட்டங்களையும், ஜோனி பேயர்ஸ்டொவ் 35 ஓட்டங்களையும் ஜேம்ஸ் வின்ஸ் 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேலும், அணித்தலைவர் ஓய்ன் மோர்கன் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களை யும், சேம் பிலிங்ஸ் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், சுழற்பந்து வீச்சாளர் மிட்செல் சான்ட்னர் 3 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 38 பந்து களில் 2 சிக்ஸர்கள் 7 பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜேம்ஸ் வின்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி - 20 போட்டி, நாளை வெலிங்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# இந்திய அணி வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்த இளசு!

பகல் - இரவு போட்டியில் பயன் படுத்தப் படும் பிங்க் நிற பந்து, சிவப்பு பந்தை விட அதிக அளவில் ஸ்விங் ஆகுமென இளம்வீரர் உனத்கட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி முதல் முறையாக பகல் - இரவு டெஸ்ட் போட்டி யில் விளையாட உள்ளது. பங்களாதேஷ் அணிக்கு எதிரான இந்தப் போட்டி கொல்கத்தாவில் நடக்கிறது.

பொதுவாக பகல் - இரவு டெஸ்ட் போட்டிகளில் பிங்க் நிற பந்து பயன்படுத்தப்படும். ஆனால், தற்போதைய இந்திய அணியில் முகமது ஷமி, சஹா ஆகியோரும், உள் ளூர் தொடரான துலீப் தொடரில் வேகப்பந்து வீச்சாளரான ஜெய்தேவ் உனத்கட்டும் தான் பிங்க் நிற பந்தில் விளையாடிய அனுபவம் கொண்டவர்கள்.

விராட் கோஹ்லி உட்பட மற்ற வீரர்களுக்கு இதில் அனு பவம் இல்லை. இந்நிலையில், பிங்க் பந்தில் விளையாடிய அனுபவத்தை வைத்து, இந்திய அணி வீரர்களுக்கு உனத்கட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் கூறுகையில், 'டெஸ்டில் பயன் படுத்தப்படும் சிவப்பு பந்தில் இருந்து முற்றிலு மாக மாறி பிங்க் பந்தை பயன்படுத்துவதால், அது எல்லோருக்கும் சவாலா னதாக இருக்கும்.

எஸ்.ஜி. சிவப்பு பந்தை போன்று பிங்க் பந்து முன்னதாகவே ரிவர்ஸ் ஸ்விங் ஆகாது. ஆனால், டெஸ்ட் போட்டிக்கு முன் பந்தின் தரத்தை அவர்கள் நன்கு அறிவார்கள். உள்ளூர்ப் போட்டிகளுக்குத் தயார் செய்யப்படும் ஆடுகளத்தை விட தரமான ஆடுகளத்தைத் தயார் செய்வார்கள்.

பிங்க் பந்து போட்டி சிறந்த ஆட்டமாக இருக்கும். புதிய பிங்க் பந்து முன்னதாகவே சிவப்பு பந்தைக் காட்டிலும் அதிக அளவில் ஸ்விங் ஆகும். இதனால் புதுப்பந்தை எதிர்கொள்வது துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக இருக் கும். - என்றார்.



# நாட்டுக்கு சிறந்த நிர்வாகத்தை எம்மால்தான் வழங்க முடியும்!

**கூறுகின்றார் அனுரகுமார எம்.பி.**



கொழும்பு, நவ. 02

நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு சிறந்த நிர்வாகத்தை எம்மால்தான் உருவாக்க முடியுமெனத் தேசிய தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல்மேடைகளைப்பார்க்கும்போது எமக்கு நத்தார் காலத்தை போன்று தெரிகிறது.

இரண்டு வேட்பாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் பல மேடைகளில் ஏறுகின்றனர். இவ்வாறு செல்லும் அவர்கள் காண்பதை எல்லாம் இலவசமாகத் தருவதாகக் கூறுகின்றனர்.

அவ்வாறாயின் இவ்வளவு காலம் யார் இந்த நாட்டை ஆட்சி செய்தனர்?

கடந்த 70 வருடங்களாகத் தேர்தல் வந்தவுடன் இவர்கள் வந்து வறுமையை விற்பனை செய்கின்றனர்.

எனவேதான் வறுமையை விற்பனை செய்யும் அரசிலுக்குப் பதிலாக வறுமையைஒழிக்கும்அரசியல் ஒன்றை இந்த நாட்டில் ஏற்படுத்தவே நாம் தற்போது வந்துள்ளோம்.

ஆகவே அதற்கான அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

## கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்

### பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 02

வருடத்தில் எத்தனையோ நாள்களில் நாம்பொங்கி அமுது உண்ணுகின்றோம். ஆனால், இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப்பொங்கலே தமிழர்களின் தேசியப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. அதேபோன்று, வருடம் பூராவும் மரங்களை நடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகை மாத மரநடுகையேதமிழர்களின்தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகைசெய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற் செயல் மாத்திரம் அல்ல அது தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்கின்ற ஒரு தேசியச்செயற்பாடும் ஆகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் மாகாண விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதம் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணசபை 2014 ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அமைவாக ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்



மக்கள் இம்மாதத்தில் மரநடுகையை ஒரு வழமையான சூழல் பேண் நடவடிக்கையாக அல்லாமல், உணர்வெழுச்சியுடன் கூடிய ஒரு தமிழ்த் தேசியச் செயற்பாடாகக் கொண்டாடவேண்டியது அவசியம் ஆகும்.

இன்று உலகளவில் பூமியின் வெப்பநிலை அதிகரித்துக் காலநிலையில் பாதகமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கடும் வறட்சி, காலம் தப்பிய பெருமழை, வேகமெடுக்கும் சூறாவளிகள் என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாமும் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம்.

இதனால், எமது எதிர்கால சந்ததியினரின் இருப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான வளியில் அதிகரித்துச் செல்லும் கரியமிலவாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டிய கட்டாயநிலைக்கு நாம்இன்றுதள்ளப்பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்குக் 'கார்' என்று மழையின் பெயரைத் தன் பெயரில் கொண்ட கார்த்திகை மாதமே மிகப் பொருத்தமான மாதமாகும். இம்மாதப் பகுதியிலேயே வடக்கு கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. இந்தப் புவியியற் காரணிக்கும் அப்பால், ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பினைக் கொண்டுள்ளது.

இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த வீர மறவர்களைக் கூட்டாக நினைவிற்கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது தொல்வழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகைசெய்து, அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபையும் கொண்டிருக்கின்றனர்.

தேசியம் என்பது ஓர் வெற்று அரசியற் சொல்லாடல் அல்ல இது ஓர் இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மதநம்பிக்கைகள் ஆகிய ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும்.

அந்த வகையில், கார்த்திகை மாத மரநடுகை என்பது சூழலியல் நோக்கிலும் தமிழ்த் தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும்.

வருடத்தில் எத்தனையோ நாள்களில் நாம்பொங்கி அமுது உண்ணுகின்றோம். ஆனால், இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப்பொங்கலே தமிழர்களின் தேசியப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. அதேபோன்று, வருடம்பூராவும் மரங்களைநடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகை மாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும்.

கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற்செயல் மாத்திரம் அல்ல அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்கின்ற ஒரு தேசியச்செயற்பாடும் ஆகும். எனவே, இப்புனித கார்த்திகையில் ஆளுக்கொரு மரம் நடுவோம். நாளுக்கொரு வரம் பெறுவோம் – என்றுள்ளது. (ஐ)

## சஜித்தை ஆதரித்த சு.க. அமைப்பாளர்கள் நீக்கம்

### தயாசிறி ஜயசேகர அதிரடி அறிவிப்பு



கொழும்பு, நவ. 02

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்த சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்கனவே பொது ஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்துள்ள நிலையில், அவர்கள் மற்றுமொரு கட்சிக்கு ஆதரவளிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான 'அப்பி ஸ்ரீ' இயக்கத்தில் இணைந்த கட்சி அமைப்பாளர்களே கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என தயாசிறி ஜயசேகர கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று ஐக்கிய தேசிய முன்னணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமையுடன், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2019 இல் வெளியிடப்பெற்றது.